வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

20.01.2021 புதன்கிழமை




# தமிழரின் கலாசார மரபுரிமைகளை அரசு ஒருபோதுமே ஒடுக்கிவிடாது

## இராஜாங்க அமைச்சர் விதுர விளக்கம்

கொழும்பு,ஜன.20

தமிழ் மக்களின் மத மற்றும் கலாசார மரபுரிமைகளை ஒடுக்கும் வகையில் தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படமாட்டாது.

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அனைத்து இன மக்களுக்கும் உண்டு. தமிழ் அரசியல்வாதிகளே தேவையற்ற பிரச்னைகளை தோற்றுவிக்கிறார்கள் என தேசிய மரபுரிமைகள், கலை கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். 02



## 18 நாள்களில் 66 பேர் தொற்றினால் மரணம்

கொழும்பு, ஜன.20

இந்த வருடத்தின் நிறைவடைந்த கடந்த 18 நாள்களில் மாத்திரம் நாட்டில் 10 ஆயி 02



## கடலினுள் மூழ்கியது இந்திய மீன்பிடி படகு

### இலங்கை கடற்படை தேடுதல் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.20

நெடுந்தீவிலிருந்து வடமேல் திசையில் சர்வதேச கடற்பரப்பிலிருந்து 8 கடல் மைல் தூரத்தில் சட்ட விரோத இந்திய 02

## மன்னாரில் முதலாவது கொரோனா மரணம்!

மன்னார், ஜன. 20

மன்னாரில் முதலாவது கொரோனா மரணம் நேற்றுப் பதிவாகியுள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மன்னார் "சைட் சிட்டி" பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய நபரே கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். 02

## கட்டாய இராணுவப் பயற்சி முன்மொழிவு மட்டும்தான்

### அமைச்சர் கெஹலிய விளக்கம்

கொழும்பு, ஜன.20

18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயற்சி வழங்குவது என்ற பொதுப்பாதுகாப்பு அமைச்சரின் அறிவிப்பு வெறும் முன்மொழிவு மட்டுமே என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று 02

## குருந்தூர் மலையில் சூலம் பிடுங்கப்படவே இல்லை!

### அங்கு இராணுவமும் இல்லை என்கிறார் மறவன்புலவு சச்சி



யாழ்ப்பாணம், ஜன. 20

குருந்தூர் மலையில் சூலம் பிடுங்கப்படவில்லை. அங்கு சென்று வழிபட எவருக்கும் தடையுமில்லை. அப்பகுதியில் ஓரிரு இராணுவத்தினரே கடமையில் உள்ளனர். இவர்களும் பெரும்பாலான நாட்கள் கடமைக்கு வரமாட்டார்கள். இப்படி தெரிவித்திருக்கிறார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம்.

அவர் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு: 02

## தொற்றாளர் எண்ணிக்கை 54 ஆயிரத்தை தாண்டியது

கொழும்பு, ஜன.20

நாட்டில் நேற்று மாலை 4 மணிவரையான காலப்பகுதியில் 337 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் பதிவானதைத் தொடர்ந்து இலங்கையில் பதிவான கொரோனா தொற்றாளர்களின் 02

## யாழில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேருக்கு கொரோனா தொற்று!

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ். மாநகர பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து 02

## குருந்தூர்மலை ஆக்கிரமிப்பு வெளிப்படையான இனஅழிப்பு!

### சபையில் சிறிதரன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 20

முல்லைத்தீவு - குருந்தூர் மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றத்தின் கவனத்துக்கொண்டு சென்றுள்ளார்.

இது வெளிப்படையான இன அழிப்பு என குற்றம் சாட்டிய அவர், சிங்களவர்களுக்கு ஒரு நீதி தமிழர்களுக்கு ஒரு நீதியா என்றும் கேள்வியெழுப்பினார். 02

## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி மீளமைக்க நிதியுதவி கோரும் யாழ். பல்கலை மாணவர்கள்




யாழ்ப்பாணம், ஜன.20

யாழ். பல்கலைக்கழகத்தில் மீண்டும் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்க நிதி உதவி வழங்குமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் மாணவர் ஒன்றியத்தினர் நேற்று நடத்திய ஊடகச் சந்திப்பின்போது இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. 02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## முள்ளிவாய்க்கால்...

பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்ட நிலையில், மாணவர்களினதும் தாயகத்தின் புலம்பெயர் தேசங்களிலுள்ள ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் ஆதரவுகளினாலும் போராட்டங்களினாலும் மீண்டும் தூபி அமைப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆகையால் இத்திட்டத்துக்கு நிதி தேவைப்படுவதால், அதற்கான நிதி உதவியை வழங்குமாறு அனைவரிடமும் மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிதியுதவியை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வங்கிக் கணக்குக்கு நேரடியாக வைப்பிலிடுமாறும் வங்கிக் கணக்கு இலக்கத்தையும் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பதற்கு மாணவர் ஒன்றியத்திடம் மாத்திரமே இந்த நிதி உதவியை வழங்குமாறும் வேறு இடங்களில் இதற்கான நிதி சேகரிக்கப்படவில்லை என்பதையும் ஏதேனும் சேகரிப்புக்கள் இடம்பெற்றால் அதற்கு மாணவர் ஒன்றியம் பொறுப்பில்லை என்பதனையும் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, யாழ். பல்கலைக் கழகத்தில் மீண்டும் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியே அமைக்கப்படும். அதனைத் தவிர வேறு எந்தத் தூபியும் அமைப்பதற்கு இடமளிக்க முடியாது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டது. இதற்கு எதிராக உள்நாட்டிலும் உலக அரங்கிலும் கண்டனங்களும் எதிர்ப்புக்களும் வெளிப்படுத்தப்பட்டன.

இடிக்கப்பட்ட தூபியை மீள அமைக்க வேண்டும் என வலியுறுத்தி மாணவர்களும் அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் இணைந்து தொடர் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் பல்கலைக்கழக துணைவேந்தர் தூபியை மீளவும் அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்து தூபி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. எனினும் இத்தூபி மீள அமைக்கப்படுவது தொடர்பில் சில சர்ச்சைகளும் வெளிப்படுத்தப்பட்ட வந்தன.

குறிப்பாக இத் தூபியானது முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அல்ல. பொதுவானது என்றும் சமாதானத் தூபி என்றும் பல செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் அத்தகைய செய்திகளை மறுத்துள்ள மாணவர் ஒன்றியப்பிரதிநிதிகள், பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியே அமையும் என்றும் அதனைத் தவிர வேறு எதுவும் அமைக்கப்படாது எனவும் தெரிவித்து சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். (அ-எ)

## தமிழரின் கலாசார...

குருந்தூர் மலை தொல்பொருள் அகழ்வுப் பணிகள் தொடர்பில் வினவிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முல்லைத்தீவு பிரதேசத்தில் குருந்தூர் மற்றும் மணலாறு படலைக்கல்லு பகுதியில் பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்த துறவிகள் வாழ்ந்தமைக்கான சான்றாதாரங்கள் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து தொல்லியல் திணைக்களம் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இச்சம்பவத்தை கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு அரசியல்வாதிகள் தவறான கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

தமிழ் மக்களின் மதம் மற்றும் கலாசார அம்சங்களை ஒடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. இந்த பிரதேசம் தொல்லியல் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதால் ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்க மாகாணத்தில் மாத்திரமல்ல அனைத்து மாகாணங்களிலும் வரலாற்று சின்னங்கள், புதைந்துள்ளன.

தேசிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்டு இவ்விடயத்தில் இனம், மதம் ஆகிய காரணிகளை கொண்டு செயற்பட முடியாது.

எதிர்கால சந்ததியினருக்காக தேசிய மரபுரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே தேசிய மரபுரிமைகள் தொடர்பில் பிரத்தியேகமாக இராஜாங்க அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது.

பௌத்த மதத்தில் மரபுரிமைகளை மாத்திரம் பாதுகாப்பது எமது நோக்கமல்ல அனைத்து இனத்தவர்களின் மரபுரிமைகளும் பாதுகாக்கப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பௌத்த விகாரைகளை கொண்டு காணி பகிஸ்கரிப்பு இடம்பெறுவதாக தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடும் கருத்து முற்றிலும் தவறானதாகும்.

அரசியல் நோககங்களுக்காக இவர்கள் இனங்களுக்கிடையில் தவறான எண்ணப்பாட்டை தோற்றுவிக்கிறார்கள். ஆகவே குருந்தூர் மலை விவகாரத்தில் தமிழ் மக்களின் மத உரிமைகள் ஏதும் ஒடுக்கப்படவில்லை- என்றார். (அ-எ)

## கடலினுள்...

மீனவப் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் இந்தப் படகினையும் அதிலிருந்த இந்திய மீனவர்களையும் மீட்கும் நடவடிக்கைகளில் கடற்படை தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

கடற்படையின் தகவல்களுக்கு அமைய, சர்வதேச கடல் எல்லையை மீறி இலங்கை கடற்பரப்பினுள் நுழைந்து மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய படகு கடற்படையினரின் எச்சரிக்கையை மீறி தப்பிச் செல்ல முயன்ற நேரம், கடற்படையின் தாக்குதல் படகுடன் மோதச் செய்யப்பட்டுள்ளதாகவும், அதன்போது சமநிலையை இழந்து நீரில் மூழ்கி விபத்திற்குள்ளாகியுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

நெடுந்தீவில் இருந்து வடமேல் திசையில் சர்வதேச கடற்பரப்பில் இருந்து 8 கடல் மைல் தொலைவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என கடற்படையினர் கூறினர்.

குறித்த இந்திய மீனவப் படகானது சட்ட விரோத மீன் மீடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நேரம், கடற்படையின் படகை மீறிச் செல்ல முயன்ற நிலையில், மிக ஆபத்தான படகு செலுத்தும் முறைமைகளை சட்ட விரோத மீனவர்கள் கையாண்டனர் என கடற்படையினர் கூறினர்.

இதன்போதே, கடற்படையினரிடம் இருந்து தப்பிக்கும் நோக்கில் குறித்த சட்டவிரோத மீன்பிடிப் படகு, கடற்படையின் படகுடன் மோதச் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் அப்படகு சமனிலை குலைந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இந்திய அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த இந்திய மீன்பிடிப் படகில் பயணித்த மீனவர்களைத் தேடும் நடவடிக்கை நேற்று முன்தினம் இரவு முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடற்படையின் சுழியோடிகளுடனான கப்பலும் படகொன்றும் குறித்த கடற்பரப்பில் தேடுதலில் ஈடுபட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (அ-எ)

## தொற்றாளர்...

மொத்த எண்ணிக்கை 54 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 54 ஆயிரத்து 87 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 46 ஆயிரத்து 594 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

மேலும் 270 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 7,223 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-எ)

## மன்னாரில்...

குறித்த நபர் கடந்த மாதம் 30ஆம் திகதி சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இம் மாதம் 16 ஆம் திகதி குறித்த நபருக்கு வைத்தியசாலையில்வைத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில் அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்" - என்றார்.

இவருடன் சேர்த்து வடக்கில் இது வரை 2 பேர் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர். வவுனியா, பெரிய உலுக்குளம் பகுதியைச் சேர்ந்த 60 வயதான பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி கடந்த மாதம் 26ஆம் திகதி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குருந்தூர்...

முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனைக்கு அண்மித்தான குருந்தக் குன்றில் அருள்மிகு ஆதி சிவ இலிங்கேச்சரர் திருக் கோயில் மூலவரான முச்சூலம் நீக்கப்பட்டதாக வந்த செய்திகள் தவறானவை. குன்றின் உச்சியில் உள்ள சைவ வழிபாட்டு இடம் எந்தவித மாற்றமும் இன்றி அப்படியே தொடர்கிறது. குருந்தக் குன்று திருக்கோயில் அறங்காவலர் என்னிடம் தெரிவித்தார்கள். மேலும் விவரம் பெற விரும்புவோர் திருக்கோயில் அறங்காவலர் திரு சசிகுமார் அவருடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறி யலாம். 009476 764 4290

குருந்தன்குளம் அணைக்கட்டுக்கு அருகே மலையடிவாரத்தில் உடைந்த கட்டடம் இருந்தது. நான் நேரில் பார்த்திருக்கிறேன். அங்கு புதிதாக ஒரு கட்டடத்தைக் கட்ட முயன்ற தால் நீதிமன்றத்தில் வழக்கு.

உடைந்த அந்தக் கட்டடத்தின் அருகே தொல்லியல் மாணவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இருந்து வந்தனர். மேசை மீது புத்தர் சிலை ஒன்றை வைத்தனர் வணங்கினர். அந்த இடத்தில் நிலத்தைத் தோண்டவில்லை, நோண்டிப் பார்த்தனர். அமைச் சர் வந்திருந்தார். படைப் பிரிவினரும் வந்திருந்தார்கள். புத்த பிக்குகள் எவரும் அங்கு வரவில்லை.

படைப்பிரிவின் காப்பரண் நெடுங்காலமாகவே அங்கு உண்டு. படைவீரர் ஒருவரோ இருவரோ இருப்பார்கள். கடமைக்கு வராத நாள்களே கூடுதலானவை. சைவக் கோயிலுக்குச் செல்வதற்கு தடை ஏதுமில்லை. பொங்கலுக்கு தடையில்லை. வழிபாட்டுக்கு தடையில்லை என அமைச்சர் அறங்காவலரிடம் கூறியுள்ளார்.

முழுமையான தகவல் அறியாமலே முச்சூலம் அகற்றியதாகத் தவறான செய்திகள் வெளியாகி சைவ உணர்வாளர்களின் மனம் புண்ணாகியதே. வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமை களில் குமுழமுனை வழியாகச் சைவ உணர்வாளர்கள் வழிபடு பயணமாக குருந்தக் குன்று சென்று குருந்த மரநிழலில் அமர்ந்து இருக்கும் சிவபெரு மானை வழிபட்டு அருள் ஆசி பெற்று வருவார்களாக - என்று கூறியுள்ளார். (ஐ)

## குருந்தூர்மலை...

மேலும் குறித்த பகுதியில் அகழ்வாராச்சி நடைபெறவுள்ளது என்றால் அங்கு செல்பவர்கள் ஏன் செங்கற்களை கொண்டு செல்லவேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேள்வியெழுப்பினார்.

## யாழில் ஓரே...

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து சுய தனிமைப்படுத்தலிலிருந்த அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடத்தில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இந்த 5 பேருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. (அ-எ)

## கட்டாய...

இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: நாட்டின் அரசியல் பின்னணி, நிர்வாகம் மற்றும் இராணுவப் பயிற்சி வழங்க வேண்டிய அவசியம் ஆகியவற்றை மதிப்பீடு செய்த பின்னர் இது தொடர்பில் பரிசீலிக்கப்படும்.

இதேவேளை, வளர்ந்த மற்றும் ஜனநாயக நாடுகளும் இத்தகைய கட்டாய இராணுவப் பயிற்சி முறையை வழங்குகின்றன. இந்த விடயத்துடன் இராணுவமய மாக்கல் என்ற வார்த்தையைப் பயன்படுத்தக்கூடாது-என்றார்.

நாட்டில் ஒழுக்கமான சமுதாயம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவப்பயற்சியை வழங்குவது தொடர்பில் பாராளுமன்றில் திட்டம் ஒன்றை முன்வைக்கவுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். (எ)

## 18 நாள்களில்...

ரத்து 437 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் பதிவாகியுள்ள நிலையில் 10 ஆயிரத்து 400 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 18 நாள்களில் பதிவான கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 66 ஆக பதிவாகியுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி தங்கியிருக்கும் காலி தடல்ல பிரதேச ஹோட்டலில் மேலும் இரண்டு பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்கள் கேகாலை, ஹெட்டிமுல்லை மற்றும் காலி, மஹமோதர பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

இதற்கு முன்னர் இந்தக் ஹோட்டலின் ஊழியர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (அ-எ)

## வெந்தபுண்ணில்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், அவ்வாறில்லாமல் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது பிரதேசங்களில் ஓர் ஆக்கபூர்வமான அபிவிருத்திக்காக வடக்கு - கிழக்கு மக்கள் ஏங்கி நிற்கின்ற தருணத்தில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலவே ஆட்சி அதிகாரங்களில் இருப்போரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு தமது வாழ்நாளில் ஒரு தடவை தொழிற்சாலைகளே தாம் வணங்கும் ஆலயங்கள் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், யுத்தத்துக்குப் பின்னர் தமது மூலவளங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் யுத்தத்தினால் வெந்து போயிருக்கின்ற தமது உணர்வுகளில் திரிசூலத்தைப் பாய்ச்சுவது போலவே குருந்தூர் மலையிலிருந்து பிடுங்கி எறியப் பட்ட திரிசூலம் காணப்படுகின்றது.

ஈழநாடு
Eelanadu
20.01.2021 புதன்கிழமை
சார்வரி, தை 07

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# கிழக்கு கொள்கலன் முனைய விவகாரம்

கிழக்கு கொள்கலன் முனையத்தை சர்வதேச முதலீட்டாளர்களுக்கு திறந்துவிடும் அரசாங்கத்தின் முடிவை, முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர வரவேற்றிருக்கின்றார். ஆனால், அத்துடன் அவர் நின்றுவிடவில்லை - கூடவே, அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்தும் கருத்தொன்றையும் கூறியிருக்கின்றார். அதாவது, அன்று நாங்கள் சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்கும் நோக்கில் செயல்பட்ட போது, எங்களை தேசத் துரோகிகள் என்று கூறியவர்கள் - இன்று வசமாக சிக்கிக் கொண்டுள்ளனர்.

கிழக்கு கொள்கலன் முனையத்தின் 49 வீதமான பங்குகளை இந்தியாவின் தனியார் நிறுவனமான அதானி குழுமத்திற்கு வழங்கப் போவதாக அண்மையில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ, கிழக்கு கொள்கலன் முனையத்தை எந்தவொரு நாட்டுக்கும் வழங்கும் தீர்மானமில்லை என்று அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கொழும்பு துறைமுக தொழிற்சங்கங்களோ, கிழக்கு கொள்கலன் முனையத்தை எந்தவொரு நாட்டுக்கும் வழங்க வேண்டாமென்றும் அதனை இலங்கையே முற்றிலுமாக வைத்திருக்க வேண்டுமென்று கூறிவருகின்றனர். அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் கொழும்பு வந்து சென்ற பின்னணியில், கிழக்கு கொள்கலன் முனைய விவகாரம் மீண்டும் பேசுபொருளானது. இந்த நிலையில் தொழிற்சங்கங்கள் அண்மையில் ஜனாதிபதி கோட்டாபயவை சந்தித்து பேசியிருந்தனர். இதன்போது, முன்னைய அரசாங்கம் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவிற்கு விற்பனை செய்ய முற்பட்டது. அதனை நாம் செய்யமாட்டோமென்று கூறியதுடன், கிழக்கு கொள்கலன் முனைய விவகாரத்தை ஆராய்வதற்கென, ஐவர் அடங்கிய குழுவொன்றையும் ஜனாதிபதி நியமித்திருந்தார்.

இதேவேளை, பொதுஜன பெரமுன அரசாங்கத்தை ஆதரித்த கடும்போக்குவாத நிலைப்பாடுள்ள பிக்குகள் அமைப்பினரும் குணதாச அமரசேகர போன்ற சிங்கள - பௌத்த தேசியவாத அமைப்புக்களும் இந்த விடயத்தில் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். ஆனால், அரசாங்கம் இந்த விடயத்தில் பின்வாங்கினால் இந்தியாவை நிச்சயம் விரோதித்துக் கொள்ள நேரிடும். அல்லது வேறு விடயங்களில் பெரும் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள நேரிடும்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான், அரசாங்கம், கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவிற்கும் கூடவே, ஏனைய சர்வதேச முதலீட்டாளர்களுக்கும் திறந்துவிடும் முடிவை எடுத்திருக்கின்றது. இதனையே மங்கள சமரவீர வரவேற்றிருக்கின்றார். கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவிற்கு வழங்கும் தீர்மானத்தை முன்னைய அரசாங்கமே மேற்கொண்டிருந்தது. சீனா பல்வேறு திட்டங்களின் ஊடாக இலங்கையில் வலுவாக காலூன்றியிருக்கின்ற நிலையில், இந்தியாவின் கோரிக்கைகள் தொடாந்தும் இழுபறியில் இருந்துவருகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் அண்மையில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டேவாலின் கொழும்பு விஜயம் இடம்பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து, ஜெய்சங்கர் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

கிழக்கு கொள்கலன் முனைய விவகாரத்தில் முன்னைய அரசாங்கத்தை ராஜபக்ஷக்கள் அணி கடுமையாக விமர்சித்திருந்தது. நல்லாட்சி அரசாங்கம் நாட்டின் இறைமையை விற்றுவிட்டதாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது. ஆனால், தற்போது அதே விடயங்களையே ராஜபக்ஷக்களும் செய்ய முயல்கின்றனர். சீனாவின் திட்டங்களுக்கு அதிகம் இடமளித்திருக்கின்ற பின்புலத்தில், இந்தியாவின் திட்டங்களை தொடர்ந்தும் இழுத்தடிக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது. தேர்தல் மேடைகளில் பேசுவது போன்று உலகத்தை கையாள முடியாது. உலகத்தை கையாளுவதா அல்லது உள்ளூர் அரசியலுக்காக உலகத்தை பகைத்து, தனிமைப்படுவதா? நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லவேண்டுமாயின் உலகத்துடன் ஒத்துழைத்துச் செல்வதே ஒரேவழி.

# ‘வெந்தபுண்ணில் பாய்ந்த சூலம்’: புதிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு பதில் பழையவற்றை தேடும் அகழ்வாராய்ச்சி!

- அலசுவது இராஜதந்திரி -



உலகில் உள்நாட்டு யுத்தங்கள் முடிவுக்கு வந்த நாடுகள் அனைத்துமே தமது பொருளா தாரத்தை கட்டியெழுப்புவதிலும், அரசியல் ரீதியாக தாம் விட்ட தவறுகளைத் திருத்திப் புதிய அரசியல், பொருளா தார நடவடிக்கைகளை கட்டியெழுப்புவதிலுமே முனைப்பாக இருக்கின்றன.

ஆனால், இலங்கையில் அரசியல், மற்றும் பொருளாதார ரீதியாக முன்னோக் கிச் சென்று மூன்று தசாப்தகால யுத்தம் ஏற்படுத்திய தவறுகளை சீர்செய்து புதிய அரசியல் கலா சாரத்தை கட்டியெழுப்புவதை விட, பின்னோக்கிச் சென்று அகழ்வாராய்ச்சி என்ற ரீதியில் பழையனவற்றை கிளறுவதையும் இல்லாத, பொல்லாதவற்றை எல்லாம் திருபு படுத்திப் பிரச்னை களை மேலும் சிக்கலாக்கி விடும் நடவடிக்கைகளிலேயே ஆட்சியதிகாரங்களில் இருப்போர் ஈடுபட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

**பௌத்த அடிப்படைவாதம்**

கடந்த ஆண்டில் வன்னி மாவட்டத்தில் உள்ள வெடுக்குநாறி மலைக்குன்றிலிருக்கும் சிவன் ஆலயத்தை அகழ்வாராய்ச்சி பிரிவினரிடமிருந்தும், பௌத்த அடிப்படைவாதிகளிடமிருந்தும் காப்பாற்றுவதற்கு அப்பிரதேசவாசிகள் பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது.

இதுதவிர, திருகோணமலையில் கிண்ணியா வெந்நீருற்று பகுதியில் கூட அங்குள்ள இந்து ஆலயத்தை அகற்றும் நடவடிக்கைகள் கடந்த ஆண்டில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஒரு வருடத்துக்கு முன்னர் முல்லைத்தீவு பிரதேசத்தில் அங்குள்ள நீராவியடி பிள்ளையார் ஆலய பிரதேசத்துக்கும் சில பௌத்தர்களால் உரிமை கொண்டாடப்பட்டு பிரச்னைகள் உருவாக்கி விடப்பட்டிருந்தன.

கிழக்கிலங்கையிலும் கால்நடை மேய்ச்சல் தரைகள் தொடர்பாக அண்மைக்காலங்களில் சர்ச்சைகள் தோன்றியிருக்க காணப்படுகின்றன.

யுத்தமற்ற சூழல் வடக்கு - கிழக்கு மக்கள் தற்போது யுத்தமற்ற ஒரு சுமுக சூழ்நிலை காணப்படுகின்ற நிலையில் தமது பிரதேசங்களின் மூலவளங்கள் தகுந்த முறையில் பயன்படுத்தப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றனர்.

ஆனால், இந்த எதிர்பார்புகளை எல்லாம் புறந்தள்ளி வடக்கு-கிழக்கு மக்கள் எத்தகைய பிரச்னைகளுக்குத் தாம் முகங்கொடுக்கக் கூடாதென்று எண்ணினார்களோ அத்தகைய பிரச்னைகளுக்கெல்லாம் தற்போது முகங்கொடுத்து வருவதையே காணமுடிகின்றது.

வட மாகாணத்தில்கூட கேப்பாபிலவு நிலப்பிரச்னை தொடர்ந்து இருந்து வருகின்ற நிலையில், மண்டைதீவு பிரதேசத்தில் கடற்படைமுகாம் விஸ்தரிப்புக்கென நில அபகரிப்பு நடவடிக்கைகளும் மிக அண்மையில் பொது மக்களின் ஆர்ப்பாட்டத்துக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

**குருந்தூர் மலை விவகாரம்**

தற்போது புதிய சர்ச்சையை கிளப்பி விட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலையில் வைக்கப்பட்டிருந்த திரிசூலம் அகற்றப்பட்டு அங்கே புத்தபகவானின் சிலையொன்று நேற்று முன்தினம் வைக்கப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இந்த சிலை வைப்பு வைபவத்தில் கலந்து கொண்டு அகழ்வாராய்ச்சி பணிகளையும் குருந்தூர் பிரதேசத்தில் ஆரம்பித்து வைத்திருந்தார்.

புத்த பகவானின் சிலைகள் குருந்தூர் மலையில் வைக்கப்பட்டு வழிபாடு செய்வதில் எவ்வித தவறுமில்லை. ஆனால், அப்புதிய சிலை வழிபாட்டுக்குரிய வகையில வைக்கப்படாது ஓர் அரசியல் சின்னமாக வைக்கப்பட்டுள்ளதோடு ஏற்கனவே, குருந்தூரில் வைக்கப்பட்டிருந்த சிவனின் சின்னமான திரி சூலம் அகற்றப்பட்டுள்ளதே கவலைக்குரிய தாக இருக்கின்றது.

பௌத்தர்கள் சிவன், விநாயகர், விஷ்ணு, முருகன் போன்ற இந்து கடவுள்களையும் வழிபடுவதோடு தென்னிலங்கையில் இருக்கின்ற பௌத்த வழிபாட்டுத்தலங்களில் இந்துக் கடவுள்களுக்கும் சிலைகள் வைக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடியும்.

ஆனால், வெடுக்குநாறி, குருந்தூர் பிரதேசங்களில் இந்து கடவுள்களது சிலைகள் அகற்றப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**தனித்துவம் பாதிக்கப்படும் நிலை**

இனநல்லுறவென்பது தத்தமது தாயகப் பிரதேசங்களில் இருக்கின்ற மக்களின் மனங்களைப் புண்படுத்தாது அவர்களது தனித்துவங்களையும் கட்டிக்காத்து தேசிய நீரோட்டத்தில் அம்மக்களையும் ஒன்றிணைப்பதாகவே இருக்க முடியும்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# ரஞ்சனை சபை அமர்வுக்கு அழைக்காவிடின் போராட்டம்

## சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை



கொழும்பு, ஜன. 20

**பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை சபைக்கு அழைக்கவில்லை என்றால் ஜனநாயக வழிகளிலும் போராட நாம் தயாராகவே இருக்கிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு கிடைத்துள்ள சிறைத்தண்டனையை அடுத்து, அவரது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்து செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக நேற்று சபையில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கும் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு தற்போது சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அவரது பாராளுமன்ற உறுப்புரிமை 6 மாதங்களுக்கு இருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. நாம் இது தொடர்பாக சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொண்டுள்ளோம்.

அதாவது அரசமைப்பின் 66, 89, 91, 105 ஆவது அரசமைப்புக்கு இணங்க, அவரது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாகாது என தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால், அதற்கெதிராக அனைத்து ஜனநாயக வழிகளிலும் போராட நாம்தயாராகவே இருக்கிறோம்.

அவரை ஏன் பாராளுமன்றுக்கு இன்று அழைக்கவில்லை எனச் சபாநாயகரிடம் நான் கேட்க விரும்புகிறேன். அவர் சிறந்த ஒரு அரசியல்வாதி. பொய், ஊழல், இனவாதம் அற்ற ஒரு அரசியல்வாதி. அவர் மக்களின் மனங்களை வென்றவர்.

இப்படியான ஒருவரை ஏன் இன்று நாடாளுமன்றுக்கு அழைக்கவில்லை என்பதற்கு பதில் கோருகின்றேன்-என்றார்.




**மேடம்**
யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். சேமிப்பு செலவிற்கு கைகொடுக்கும். கூட்டாளிகள் விலக நேரிடும். பயணங்களால் தொல்லை உண்டு.

**இடபம்**
வருமானப் பற்றாக்குறை அகலும். வளர்ச்சி கூடும். பிள்ளைகளின் உத்தியோக முயற்சி பலன். சுபச் செய்திவந்து சேரலாம்.

**மிதுனம்**
முயற்சியில் வெற்றி. முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். ஊர்மாற்றச் சிந்தனை உருவாகும். வரவு திருப்தி விலகிச் சென்றவர்கள் வந்திணைவர்.

**கடகம்**
சோகங்கள் மாறிச் சுகங்கள் கூடும். ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள். மனக்கலக்கம் மாறும். தொழில் முன்னேற்றம்.

**சிம்மம்**
செலவுகள் அதிகரிக்கும். சிரித்துப்பேசும் நண்பர்களால் சிக்கல்கள். பகை ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச்செல்வது நல்லது. உடல்நலனில் அக்கறை.

**கன்னி**
ஆச்சரியப்படும் தகவல் வந்து சேரும் நாள். தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம். பழைய வாகனத்தைப் புதுப்பிக்கும் சிந்தனை.

**துலாம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் நாள். சகோதர வழிச்சச்சரவுகள் அகலும். எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சலுகைகள்.

**விருட்சிகம்**
வருமானம் திருப்தி.பாராட்டும், புகழும் கூடும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி. திருமணம் கைகூடும். தெய்வீகத் திருப்பணிகளில் ஆர்வம்.

**தனுசு**
உற்சாகத்துடன் செயல்படும் நாள். வெளியுலகத் தொடர்பு விரும்பும் விதத்தில் அமையும். பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். மனக்குழப்பம் அகலும்.

**மகரம்**
விரக்தி நிலை மாறி விடிவு காலம் பிறக்கும். இடமாற்றத்தால் இனியமாற்றம். தேக நலனில் அக்கறை. திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்களைச் செய்வீர்கள்.

**கும்பம்**
தொழில் வளர்ச்சி கூடும். எதிரிகள் விலகுவர். மங்கல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். இல்லத்திற்கு பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு.

**மீனம்**
நினைத்தது நிறைவேறும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம். தொழில் சம்பந்தமாக புதிய ஒப்பந்தங்கள் சேரும். காரியமொன்று இனிதே முடிவடையும்.

# நேர்மையான பிரதிநிதியான ரஞ்சனுக்கு அநீதி இழைப்பு

## சபையில் சுமந்திரன் விசனம்



கொழும்பு, ஜன. 20

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்படுவதில் இருக்கும் வெற்றிடத்தினால் நேர்மையான மக்கள் பிரதிநிதிக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் நீதிமன்ற அவமதிப்பு தீர்ப்பு தொடர்பான தமது கருத்தை நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

ரஞ்சன் ராமநாயக்க குறித்த வழக்கில் நானே அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என்பதை தெரியப்படுத்தி க்கொள்கின்றேன்.

நேர்மையானதொரு அரசியல்வாதியின் சார்பில் நான் அவ்வழக்கை முன்னெடுத்ததில் பெருமையடைகின்றேன். துரதிஷ்டவசமாக அவர் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு நான்கு வருட கடூழியத் தண்டனை விதிக்கப்பட்டது அசாதாரணமானதும் பாரதூரமானதொரு நிகழ்வாகும்.

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக சட்டங்கள் இயற்றப்படாத காரணத்தால் பாராளுமன்றம் இதற்கு பொறுப்பு கூற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நீண்ட காலமாக இவ்வாறான நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்பட வேண்டிய தேவையிருந்தும், பொதுநல நோக்கோடு அநேக வரைவுகள் வரையப்பட்டும் சட்டங்கள் இயற்றப்படவில்லை. எனவே காட்டுக்கழுதைக்கு கிடைத்த சுதந்திரம் போல எவரும் எதனையும் தீர்ப்பளிக்கக் கூடியதொரு சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

மேலும் உள்ளூர் சட்டங்கள் இயற்றப்படாத நிலையில் ஆங்கில சட்டமே நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுவதாலும், ஆங்கில சட்டத்தில் இப்படியான கூற்றுக்கள் நீதிமன்ற அவதூறாக கணிக்கப்படுவதில்லை என்பதனைக் கருத்தில் கொள்ளாது, குறித்த தீர்ப்பை அளித்தமை தவறானதொருபோக்கு என்பதே எமது நிலைப்பாடு.

அத்துடன் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்படுவதில் இருக்கும் வெற்றிடமானது நேர்மையானதொரு பாராளுமன்ற உறுப்பினருக்கு அசாதாரணமுறையில் அநீதி இழைக்கப்பட வழி வகுத்துள்ளது-என்றார்.

# 297 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜன. 20

குவைத்துக்கு தொழில் புரியச்சென்று அங்கு நிர்க்கதிக்குள்ளாகி இருந்த 297 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு, இலங்கை விமான சேவைக்குரிய விசேட விமானம் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை அவர்கள் வந்தடைந்தனர்.

இவர்கள் அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

# சுற்றுலாப் பயணிகளுக்காக நாளை விமான நிலையங்கள் திறக்கப்படும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு



கொழும்பு, ஜன. 20

கட்டுநாயக்க விமான நிலையம் நாளை வியாழக்கிழமை சுற்றுலாப் பயணிகளுக்குத் திறக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை உறுதிப்படுத்தினார்.

சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவது குறித்து அமைச்சர் மேலும் விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுலா விஸா பெற்றுக்கொண்டு வெளிநாட்டவர்கள் இலங்கை வர முடியும் என்றும் இதனைத் தவிர இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர் இலங்கைக்கு வர முடியும்.

எனினும், அவர்கள் இலங்கை வருவதற்கு 72 மணி நேரத்திற்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனை செய்துகொண்டு கொவிட் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் அத்தியாவசியமானது.

இதனைத்தவிர, கட்டுநாயக்க விமான நிலையத்தில் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்படும் என்றும் அதன் பின்னர் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஹோட்டல்களில் அவர்கள் ஒருவாரம் பாதுகாப்பு நடைமுறைகளுடன் தங்கவைக்கப்படுவர்.

இதேவேளை, குறித்த ஹோட்டல்கள் சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டிருக்கும். இவ்வாறு ஒருவார காலத்தின் பின்னர் தேவையெனில் மீண்டும் பி.சீ.ஆர். பரிசோதனை செய்துகொண்ட பின்னர் அவர்கள் இலங்கையில் சுற்றுலாவை மேற்கொள்ளலாம்.

எனினும், சுகாதார நடைமுறைகளுடன் மிகவும் பாதுகாப்பான வழிமுறைகளைப் பின்பற்றி சுற்றுலாப் பயணிகளை அழைத்துவருவோர் அவர்களைக் கையாள்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்டவர்களும் மிகவும் பாதுகாப்பான முறையில் அவர்களுக்கான சேவைகளை வழங்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது-என்றார்.





# வேலணை பிரதேச செயலகத்தை நேற்று முற்றுகையிட்டனர் மக்கள்

## காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் திரண்டு கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

**பொதுமக்களின் காணிகளை சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் காணி சுவீகரிப்புச் செயற்பாடுகளை நிறுத்த கோரியும் வேலணை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான் பிரதேசத்தில் 11 பேருக்கு சொந்தமான 5 ஏக்கர் காணியை கடற்படையின் தேவைக்காக சுவீகரிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களத்தினால் அளவீடு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காணி உரிமையாளர்களும் பிரதேச மக்களும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இணைந்து போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். ஆயினும் நேற்று காணி அளவீட்டுத் திணைக்கள அதிகாரிகள் காணி அளவிடுவதற்கு அங்கு வருகை தரவில்லை.

திடீர் திடீரென மக்களுக்குச் சொந்தமான காணிகளை படையினரின் தேவைகளுக்காக அபகரிப்பது நிறுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீண்டும் மக்களிடமே வழங்க கோரியும் வேலணைப் பிரதேச செயலகத்துக்கு மக்கள் பேரணியாகச் சென்றனர்.

எமது நிலம் எமக்கு வேண்டும், சுவீகரிக்காதே சுவீகரிக்காதே எமது காணிகளை சுவீகரிக்காதே, நிறுத்து நிறுத்து காணிகளை அளவிடுவதை நிறுத்து, வேண்டும் வேண்டும் எமது காணிகள் எமக்கு வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு வேலணை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு பிரதேச செயலகத்துக்குள் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உள்நுழைவதற்கு தடை விதித்தனர்.



எனினும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாம் பிரதேச செயலரிடம் மனு கையளிக்க வேண்டும் என்றும் தமக்கான நீதி கிடைக்க வேண்டும் என்றும் காணி அளவீட்டை நிறுத்துவது தொடர்பில் பிரதேச செயலர் உறுதிமொழி வழங்க வேண்டும் என்று கோரியும் அங்கு கூடினர்.

இதன்போது மக்களின் காணிகளை சுவீகரிப்பதை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

காணிகளை சுவீகரிக்க முயற்சி முன்னெடுக்கப்பட்டாலும் மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதால் அதனை தாம் தற்காலிகமாக இடை நிறுத்துவதாகவும் இது தொடர்பில் காணி அமைச்சு தெரியப்படுத்தி அதன்பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்றும் பிரதேச செயலர் சோதிநாதன் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இதன்போது அரசின் இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டால் சிவில் நிர்வாகத்தை வடக்கு-கிழக்கு முழுவதும் முடக்கி தமிழ் மக்களது கடுமையான எதிர்ப்பை அரசிற்கு காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த அரசியல் பிரமுகர்கள் கருத்து வெளியிட்டனர்.

# குறைந்தபட்ச சம்பளம் 25 வீதம் அதிகரிக்கும்

கொழும்பு, ஜன. 20

ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளக் கொடுப்பனவு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க சம்பளக் கொடுப்பனவு சட்டத்திலேயே இவ்வாறு திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய, ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளக் கொடுப்பனவை 25 சதவீதத்தால் அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# கடன் செலுத்த தேசிய வளங்களை விற்பனை செய்து வருகிறது அரசு



கொழும்பு, ஜன. 20

நாட்டின் கடனைத் செலுத்துவதற்காக அரசாங்கம் தேசிய வளங்களை விற்பனை செய்து வருகிறது என தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த ஆண்டு மட்டும் 5.8 பில்லியன் டொலர் கடனை திருப்ப செலுத்தவேண்டியுள்ளது என்றும் ரில்வின் சில்வா கூறினார்.

இந்த கடனை செலுத்துவதற்காக எண்ணெய் குதங்கள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் உள்ளிட்ட பெறுமதிமிக்க வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க அரசாங்கம் முயற்சிக்கிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

பொது ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த துறைமுகங்கள் ஒரு அத்தியாவசிய சேவையாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அப்படி என்றால் அரசாங்கம் ஏன் துறைமுகத்தை விற்க நடவடிக்கை எடுக்கின்றது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

# அடுத்த மாத இறுதிக்குள் இலங்கையருக்கு தடுப்பூசி

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 20

அடுத்த மாத இறுதிக்குள் 11 மில்லியன் இலங்கையர்கள் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வார்கள் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், தடுப்பூசியை 50 வீதம் இலவசமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை, கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்ள தற்போது நான்கு கொரோனா தடுப்பூசி உற்பத்தியாளர்களுடன் அரசாங்கம் பேச்சு நடத்தி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# அடையாள அட்டையுடன் இரணைதீவு மீனவர்கள் தொழில் செய்ய அனுமதி

## கிளிநொச்சி அரச அதிபர் அறிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 20

இரணைதீவு கடற்றொழிலாளர்கள், அவர்களது தேசிய அடையாள அட்டைகளை காண்பித்து தொழில் செய்ய முடியும் என கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி- இரணைதீவு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று காலை கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இந்த கலந்துரையாடல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரணைதீவு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இரணைதீவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க இருக்கின்றோம்.

குறிப்பாக பாடசாலை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் கடல் போக்குவரத்து தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளோம்.

இதேவேளை, இரணைதீவு கடற்றொழிலாளர்கள், தங்கள் தேசிய அடையாள அட்டைகளை காண்பிக்கும் பட்சத்தில் அவர்கள் தொழில் செய்வதற்கான அனுமதி வழங்கப்படும்- என்றார்.

# கிளிநொச்சி வளாக விகாரை சேதம் விசாரிக்க நான்கு பொலிஸ் குழுக்கள்

கொழும்பு, ஜன. 20

யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் அமைந்திருந்த பௌத்த விகாரை சேதமாக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுக்க நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வாளகத்தில் உள்ள விகாரை கடந்த 13 ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மத தலங்கள் அமைந்துள்ளன.

எனினும், பௌத்த விகாரை பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுப் புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது. இந் நிலையிலேயே இந்த விகாரை சேதமாக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டது. இதற்குப் பதிலடியாக பௌத்த விகாரை சேதமாக்கப்பட்டிருக்கலாம் என தென்னிலங்கையில் சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதனையடுத்தே இது குறித்த விசாரணைக்காக 4 விசேட பொலிஸ் குழுக்கள் கிளிநொச்சி அனுப்பப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தொற்றை கட்டுப்படுத்தாவிடின் ஜனவரிக்கு பின்னர் ஆபத்துதான்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.20

**கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு ஏனைய நாடுகள் பின்பற்றிய தந்திரோபாய அணுகுமுறையை இலங்கை பின்பற்றாவிட்டால் ஜனவரிக்கு பின்னர் என்ன நடக்கும் என்பது தெரியாது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

கொரோனா வைரஸிற்கு எதிரான தந்திரோபாய அணுகுமுறை அவசியம் என்றும் அது தங்கள் நாட்டுக்கு பொருந்தும் விதத்தில் பயன்படுத்தவேண்டும் எனவும் அந்தச் சங்கத்தின் வைத்தியர் ஹரித் அளுத்கே தெரிவித்துள்ளார்.

பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரித்து நோயாளிகளை கண்டுபிடிக்கவேண்டும். நகரங்களுக்கு இடையே போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து விசேட கவனம் செலுத்தவேண்டும். இதன் மூலம் மக்கள் மத்தியில் வைரஸ் அபாயத்தை குறைக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

கொவிட் 19 நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும் மேல் மாகாணத்திலிருந்து வைரஸ் ஏனைய பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். நோயாளிகள் புதிதாக அடையாளம் காணப்படுவதால், மருத்துவமனைகளில் இடவசதியில்லாத நிலை உருவாகி வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். மருத்துவமனைகள் தங்களால் இயலக்கூடிய அளவினை கடந்துவிட்டால் நாட்டின் சுகாதார அமைப்பு முறை முற்றாக வீழ்ச்சி காணலாம் எனவும் அவர் கூறினார்.

# கொரோனா தொற்றின் புதிய நோய் அறிகுறிகள்



கொழும்பு, ஜன.20

கொரோனா தொற்றின் புதிய நோய் அறிகுறியாக 'கொவிட் டன்' என்ற அறிகுறி தற்போது உலகளவில் பரவி வருவதாக விசேட வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோய் அறிகுறி மூலம் நபரொருவரின் நாக்கு தொற்றுக்கு உள்ளாவதுடன், நாக்கிற்கு வெளிப்புறத்தில் காயங்கள், சிவந்த கொப்புளங்கள், சிவந்த புள்ளிகள் போன்றவை உருவாகும் என குழந்தை மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

எவரேனும் இந்த அறிகுறிகளைக் கொண்டிருந்தால், அவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படுவதுடன், அவர்களுக்கு மிகவிரைவில் பி.சி.ஆர் பரிசோதனை செய்ய பரிந்துரைக்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

இந்த அறிகுறிகள் குழந்தைகளுக்குகூட தோன்றுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் குழந்தை மருத்துவர் தீபால் பெரேரா குறிப்பிட்டார்.

# மன்னாரில் இம்மாதம் 54 தொற்றாளர்கள்!

மன்னார், ஜன. 20

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 84 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகின்றது. எனவே மக்கள் உரிய சுகாதார நடை முறைகளை பின் பற்றி சுகாதார துறையினருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என மன்னார் மாவட்ட அரசங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 10.30 மணியளவில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

அதனை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 6 ஆயிரத்து 938 பீ.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த பரிசோதனையின் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 84 பேர் கொரோனா தொற்று உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் தற்போது வரை 54 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களுடன் தொடர்பு உள்ளவர்களை சுய தனிமைப்படுத்தி அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை சுகாதாரத் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் பிரதேச செயலாளர்கள் தமது பகுதிகளில் சுய தனிமைப் படுத்தப்படுகின்றவர்களுக்கான மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஜனவரி மாதம் அதிக எண்ணிக்கையான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பணியாளர்களும் கொரோனா தொற்றிற்கு உள்ளாகி உள்ளனர்.

கலந்துரையாடலின்போது மிகவும் இறுக்கமாக சட்டங்களை செயல்படுத்த வேண்டும் எனவும், மக்களுக்கான விழிர்ப்புணர்வுகளை வழங்கவேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வர்த்தக நிலையங்கள் கண்காணிக்கப்பட வேண்டும் எனவும், அவர்களுடைய செயல்பாடுகள் , சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல், மக்களுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் முறைகள் போன்றவற்றை அவதானித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள் ஆலோசனைகள் வழங்கி உள்ளோம்.

குறிப்பிட்ட நாட்களில் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுகின்ற ஊழியர்கள் அதிகம் கொரோனா தொற்றிற்கு உள்ளாகி உள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் சுமார் 10 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. தொடர்ந்தும் வியாபார நிலையங்களில் பணியாற்று கின்றவர்களுக்கு தொற்று காணப்படுமாக இருந்தால் ஏனைய வியாபார நிலையங்களையும் மூடி அவர்களின் பாதுகாப்பை உறுதி படுத்திக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவர்களையும் மக்களையும் பாதுகாக்கவேண்டும். இவ்விடயம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை சுகாதாரத் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் பணியாளர்கள், சுகாதாரத் துறையினர் தொடர்ச்சியாக அரவு பகல் பாராது கொரோனா தொற்றாளர்களுக்காக கடமையாற்றி வருகின்றனர்-என்றார்.

# கோப் குழுவுக்கு இரண்டு புதிய உறுப்பினர்கள்

கொழும்பு, ஜன. 20

அரசாங்க நிதி பற்றிய குழுவில் இரு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன நேற்று காலை கூடிய பாராளுமன்ற அமர்வின்போது அறிவித்தார்.

அதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களான மனுஷ நாணயக்கார மற்றும் குமார வெல்கம ஆகியோர் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு (கோப்) நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோப் குழு உறுப்பினர்களான ஹேஷா விதானகே மற்றும் சமிந்த விஜேசிறி ஆகியோரின் இராஜினாமாவினால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வவுனியாவில் நேற்று மேலும் 20 பேருக்கு கொரோனா

வவுனியா,ஜன.20

வவுனியா - பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த 20 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா- பட்டாணிச்சூர் பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அப்பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் ஒருபகுதி முடிவுகள் நேற்று வெளியாகின.

அதனடிப்படையில் அப்பகுதியைச் சேர்ந்த 20 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுனியாவில் இதுவரை 222 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ)

## அரிசி, மா, சீனி உட்பட

# 10 பொருட்களுக்கு நிர்ணய விலைகள்

கொழும்பு, ஜன. 20

10 அத்தியாவசியப் பொருட்களுக்கு ஆறு மாதங்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த கட்டுப்பாட்டு விலை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்கு நடைமுறை யிலிருக்குமென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கட்டுப்பாட்டு விலையின் பின் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கென விநியோ கஸ்தர்களுக்கான விலைமனு கோரல் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதற்கிணங்க அரிசி, மா, சீனி, பருப்பு, வெங்காயம், கடலை, நெத்தலி, ரின் மீன் உள்ளிட்ட 10 அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்கே கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி அத்தியாவசிய உணவுப்பொருட்களை நாடு முழுவதிலுமுள்ள சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரஞ்சனை சபைக்கு அழைப்பது குறித்து சட்ட ஆலோசனையை பெறவேண்டும்

## சபாநாயகர் நேற்று சபையில் பதில்



கொழும்பு, ஜன. 20

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை பாராளுமன்றுக்கு அழைப்பது குறித்து சட்ட ஆலோசனையை பெற்றுக்கொள்ளவேண்டும் என சபாநாயகர் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர சிறைத் தண்டனை பெறும் எவ்வாறு தற்போது பாராளுமன்றுக்கு வருகிறார் என்று கேள்வி எழுப்பப்படுகின்றது. உரிய சட்ட ஆலோசனைக்கு அமைவாகவே அவர் பாராளுமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தார். உடனடியாக அவர் பாராளுமன்றுக்கு வரவில்லை.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க விவகாரம் தொடர்பாக இன்று தான் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக நாம் சட்ட ஆலோசனையை பெறவேண்டியுள்ளது. எனவே, எனக்கு சிறிது காலம் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கிடையில் எந்தவொரு நபருக்கோ அல்லது கட்சிக்கோ கருத்துக்களை முன்வைக்க வேண்டுமாக இருந்தால், எழுத்து மூலமாக அதனை சமர்ப்பிக்குமாறும் நான் கேட்டு கொள்கிறேன்.

மூன்று வார காலத்திற்குள் இதற்கான முடிவை நான் அறிவிக்கின்றேன்-என்றார்.

# அயல் நாடுகளுக்கு முன்னுரிமை அதில் ஒருபோதும் மாற்றமில்லை

## ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் உறுதி

கொழும்பு,ஜன.20

**அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்ற தனது கொள்கைக்கு தொடர்ந்தும் முக்கியத்துவம் வழங்கப்படும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதிக்கு உத்தரவாதம் வழங்கியுள்ளார்.**

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை வழங்கும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளமைக்காகவும் நட்புறவு அயல்நாடுகள் குறித்த தாராள மனப்பான்மைக்காகவும்ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ இந்திய ஜனாதிபதிக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இதற்கு தனது டுவிட்டர் செய்தியில் பதிலளித்துள்ள இந்தியப் பிரதமர் மோடி, "நன்றி கோட்டாபய ராஜபக்ஷ. நோய் பரவலுக்கு எதிராக கூட்டாக போராடும் அதேவேளை, நாங்கள் தொடர்ந்தும்அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்ற எங்கள்கொள்கைக்கு முக்கியத்துவம் வழங்குவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய அரசாங்கம் அயல்நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் மில்லியன் டோஸ்களுக்கு அதிகமான கொரோனா வைரஸ் மருந்தை வழங்குவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றது என இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


Narendra Modi @narendramodi
Thank you, President @GotabayaR. We will contrinue to give due importance to our Neighborhood First policy while collectively fighting the pandemic.

Gotabaya Rajapaksa @GotabayaR
My heartiest congranulations to Prime Minister Shri @narendramodi on the successful roll out of the #COVID19 vaccine & his generosity towards friendly neighbouring countries.

#COVID19Vaccination
#india #SriLanka

10:45 PM · Jan 18, 2021

19.6K See the latest COVID-19 information on Twitter

# மூன்று பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு

வவுனியா, ஜன. 20

வவுனியா தரணிக்குளம் பகுதியில் தலையில் காயங்களுடன் மூன்று பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்த சிலர் நேற்று அதிகாலை பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.


சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இந்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த ஆ.யேசுதாசன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

குறித்த மரணம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# உறுதிமொழியில் இருந்து 'பல்டி' அடித்துள்ளது அரசு

## சாடுகின்றார் விக்கிரமபாகு



கொழும்பு, ஜன. 20

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என உறுதியளித்த அரசாங்கம் தற்போது அந்த உறுதிமொழியிலிருந்து 'பல்டி' அடித்துள்ளது என்று நவசமமாஜக்கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

இது தொடர்பில்அவர்மேலும் கூறியவை வருமாறு,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என்ற உறுதிமொழி தேர்தல் காலங்களில் வழங்கப்பட்டிருந்தது. தேர்தல் முடிந்த பின்னர் 'அடிப்படை' என்ற சொற்பதம் மாயமாகிவிட்டது. அரசாங்கமும், அதன் பங்காளிக்கட்சியான காங்கிரசும் தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கு முயற்சிக்கின்றன.

அதுமட்டுமல்ல ஊழியர்களுக்கு சட்டபூர்வமாக கிடைக்க வேண்டிய விடயங்களைக்கூட சம்பள உயர்வாகக்காட்டும் வகையில் நயவஞ்சக சம்பள சூத்திரத்தையே கம்பனிகள் முன்வைத்துள்ளன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசிலுள்ள பங்காளி என்ற வகையில் சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்கவேண்டிய பொறுப்பு காங்கிரஸுக்கு இருக்கின்றது.

கந்தப்பளையில் தோட்ட முகாமையாளருக்கு எதிராக மக்களை திரட்டி பலத்தை காட்டிய காங்கிரஸ், கம்பனிகளிடம் பதுங்குவது ஏன்? உறுதியானதொரு முடிவை இது விடயத்தில் காங்கிரஸ் அறிவிக்கவேண்டும். கூட்டு ஒப்பந்தம் மற்றும் அரசாங்கத்திலிருந்து வெளியேறினால் அனைவரும் இணைந்து போராடலாம்-என்றார்.

# வவுனியாவில் குடும்ப பெண் உயிர் மாய்ப்பு

வவுனியா, ஜன. 20

வவுனியா- கூமாங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் தற்கொலை செய்துகொண்ட இளம் குடும்ப பெண்ணின் சடலம், பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 26 வயதான பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று வீட்டில் எவரும் இருக்கவில்லை எனவும் இதன் போதே அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் கணவன்- மனைவிக்கு இடையே தகராறு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

# எம்.பி. பதவியை இழந்தார் ரஞ்சன்



## சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 20

நீதிமன்ற அவமதிப்புக்கான தண்டனை காரணமாக ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற ஆசனம் இழக்கப்பட்டது எனச் சட்டமா அதிபர், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருட கடூழியச் சிறைத் தண்டனையை உயர்நீதிமன்றம் கடந்த 12ஆம் திகதி வழங்கியிருந்தது.

இந்தச் சிறைத் தண்டனை, சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், இரண்டு வருடங்கள் 8 மாதங்களில் நிறைவடையும் எனச் சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் பிரஜாவுரிமை, சிறைத் தண்டனை முடிவடைந்ததன் பின்னர் பறிக்கப்படும் எனச் சட்டத்தரணிகள் கூறுகின்றனர்.

அவ்வாறாயின், ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 11 வருடங்கள் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாது எனவும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

# மின்கட்டணம் செலுத்த ஆறு மாத கால சலுகை

கொழும்பு, ஜன. 20

இலங்கையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்போரின் மின் கட்டணத்தை செலுத்துவதற்கு 06 மாத கால சலுகை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

அதன்படி தொடர்ந்து 14 நாட்களுக்கு மேலாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளபகுதிகளில்வசிப்போருக்கே இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறிப்பிட்ட காலப்பகுதி வரையில், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் மின்சார விநியோகம் துண்டிக்கப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 126 நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஜன. 20

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 126 அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் 1004 அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களில் 848 நிறுவனங்கள் சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படுவதாகவும் அவர் கூறினார்.



# கூட்டு ஒப்பந்தம் தொழிலாளர்களுக்கு வரமா, சாபக்கேடா?



> தொழில் பாதுகாப்பு என்பது முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் மாதாந்தம் 22 நாட்கள் வேலை வழங்க வேண் டும். தவறின் அதற்கேற்ற முழுச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது முதலாளிமாருக்கு ஒரு எச்சரிக்கையாகவே அமைந்திருந்தது. கட்டாயமாக தொழில் வழங்கியே தீர வேண்டும் என்பதால் தேயிலை, இறப்பர் தோட்டங்களைப் பாதுகாத்தார்கள், புல் வெட்டினார்கள், உரம் போட்டார்கள். இதனால் தோட்டங்கள் பாதுகாக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு நிரந்தரமான தொழிலும் கிடைத்தது.

**இரா. புத்திரசிகாமணி**

தொழில் தருநர்களுக்கும் தொழில் பெறுபவர்களுக்கும் இடையில் செய்து கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தங்கள் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டவை. சில நாடுகளில் அரச ரீதியான சட்ட ஆவணமாகவும் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு உத்தரவாதம், தொழிலாளர்களின் பொது சுகாதார பாதுகாப்பு, தொழிலாளர்களின் அத்தியாவசிய தேவையான குடியிருப்பு, தாய்சேய் பாதுகாப்பு, குடிநீர், தொழிலாளர் பிள்ளைகளின் கல்வி, தொழில் காப்புறுதி எனப் பல சேமநலத் திட்டங்களுடன் உழைப்புக்கேற்ற ஊதியம் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவும், சேவைக்காலக் கொடுப்பனவும் ஊக்குவிப்புக்களும் இந்த கூட்டு ஒப்பந்தங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன.

ஆனால் இலங்கையில் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் தொடர்பாக செய்து கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தங்கள் தொழிலாளர்களுக்கு ஏமாற்றத்தையே தருகின்றன.

தொழில் பாதுகாப்பு என்பது முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் மாதாந்தம் 22 நாட்கள் வேலை வழங்க வேண்டும். தவறின் அதற்கேற்ற முழுச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இது முதலாளிமாருக்கு ஒரு எச்சரிக்கையாகவே அமைந்திருந்தது. கட்டாயமாக தொழில் வழங்கியே தீர வேண்டும் என்பதால் தேயிலை, இறப்பர் தோட்டங்களைப் பாதுகாத்தார்கள், புல் வெட்டினார்கள், உரம் போட்டார்கள். இதனால் தோட்டங்கள் பாதுகாக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு நிரந்தரமான தொழிலும் கிடைத்தது.

இன்று தேயிலை, இறப்பர் தோட்டங்கள் பற்றைக் காடுகளாகவே மாறி விட்டன. போதிய பராமரிப்பு இல்லை. விஷப்பாம்புகள், குளவிகள், காட்டு சிறுத்தைகள் குடிகொள்ளும் உறைவிடங்களாக மாறி விட்டன. குளவி கொட்டியும், பாம்பு தீண்டியும், சிறுத்தைகள் தாக்கியும் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் வேதனைகள் தொடர்கின்றன.

சம்பவம் நடந்தவுடன் தொழிற்சங்கத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் வரிந்து கட்டிக் கொண்டு அறிக்கை விடுகின்றனர்.

ஆனால் நடப்பது ஒன்றும் இல்லை. தொழிலாளர்களின் மரணங்கள் வெறும் செய்தியாகவே மறைந்து விடுகின்றன. தேயிலைச் செடிகளுக்குள் காணப்படும் குளவிக் கூடுகளைக் முற்றாக அழித்து தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் எண்ணம் தோட்ட நிர்வாகங்களுக்கு இல்லை. அதைத் தட்டிக் கேட்கும் தைரியமும் தொழிற்சங்கங்களுக்கு இல்லை.

கூட்டு ஒப்பந்தங்களை செய்து விட்டால் மட்டும் போதாது. அதனை நடைமுறைப்படுத்தவும் தொழிற்சங்கங்கள் ஆவன செய்ய வேண்டும். தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தங்கள் முதலாளிமாருக்கு சாதகமாகவே அமைந்து விட்டன.

கடந்த ஆறு வருடங்களில் பல ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் நிரந்தர தொழில் அற்றவர்களாக்கப்பட்டுள்ளனர். பெருந்தொகையான தோட்டக் காணிகள் மூடப்பட்டு தரிசுகளாக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்டத்துறை பேரழிவுக்கே இட்டுச் செல்லப்படுகின்றது. அதை தடுத்து நிறுத்த வேண்டும்.

காலம் காலமாக பெருந்தோட்டத் துறையையே நம்பியிருக்கும் தொழிலாளர்களின் எதிர்காலம் சூனியம் ஆக்கப்படுகின்றது. தோட்டங்களில் தொழில் இல்லாததனாலேயே மலையக இளைஞர், யுவதிகள் தூரப் பகுதிகளுக்கு தொழில் தேடிச் சென்றனர்.

தோட்டங்களை விட்டு வெளியேறிய இளைஞர்கள் இன்று கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தோட்டங்களுக்கே திரும்பி விட்டனர். வருமானமின்றி அவர்கள் உள்ளனர். ஒவ்வொரு தோட்டத்திலும் பெருந்தொகையான இளைஞர், யுவதிகள் இருக்கின்றனர். இவர்களுக்கு தொழில் வழங்க முடியாவிட்டாலும், தோட்டங்களில் தரிசாக கிடக்கும் காணிகளை வழங்கினால் அவர்கள் விவசாயம் செய்ய முடியும்.

தோட்டங்களில் தொழிலாளர்களின் பல சலுகைகள் இன்று ஒழிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக லயத்திற்கு லயம் துப்புரவுத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தினசமும் தொழிலாளர்களின் குடியிருப்புகளை சுற்றி துப்புரவு செய்தனர். தோட்ட வைத்தியர் என ஒருவர் இதனை மேற்பார்வை செய்வார்.

தோட்டத்தில் வேலைக்குப் போகாதவர்கள், வயோதிபர்கள், குழந்தைகள் என பரிசோதித்து மருந்து கொடுப்பார்கள்.

பாடசாலைக்கு செல்லாத வயதில் இருக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பகல் உணவும் வழங்கினார்கள்.

ஆனால், தோட்டங்கள் புதிய கம்பனிக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் இந்த சலுகைகள் எல்லாம் இல்லாமல் போய் விட்டன. வைத்தியசாலைகள் என்ற பெயரில் வைத்தியரும் மருந்தும் இல்லாத கட்டடங்கள் அங்கு இருக்கின்றன.

தொழிலாளர்களின் அத்தியாவசிய நலன்புரித் திட்டங்கள் கூட்டு ஒப்பந்தம் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.





# “பேரழிவுமிக்க தோல்வியை உலகம் எதிர்நோக்கி உள்ளது”

## கடும் எச்சரிக்கை விடுக்கும் ஐ.நா.

> “முதலில் எனக்கு தான் தடுப்பூசி என்கிற அணுகுமுறை, நம்மை நாமே தோற்கடித்துக் கொள்ளும் விதத்தில் அமையும். இது தடுப்பூசியின் விலையை அதிகரிக்கும், பதுக்கலை ஊக்குவிக்கும். இது போன்ற செயல்களால் கொரோனா நீண்ட நாட்களுக்கு நம்மிடையே நீடிக்கும்”



சமமற்ற கொரோனா தடுப்பூசி கொள்கைகளால், உலகம் தார்மீக ரீதியாக பெரிய தோல்வியை சந்திக்கவிருக்கிறது என உலக சுகாதார அமைப்பு எச்சரித்திருக்கிறது.

ஏழ்மையான நாடுகளில் கொரோனாவால் பாதிக்கப்பட வாய்ப்பிருக்கக் கூடியவர்களுக்கு தடுப்பூசி கிடைப்பதற்கு முன், பணக்கார நாடுகளில் நல்ல உடல் நலத்துடன் இருப்பவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தடுப்பூசி கிடைப்பது நியாயமல்ல என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரியேசஸ் கூறினார்.

இதுவரை பணக்கார நாடுகளில் 3.9 கோடி டோஸ் தடுப்பூசி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு ஏழை நாட்டில்வெறும்25 டோஸ்தடுப்பூசிதான்வழங்கப்பட்டிருக்கிறது.


கொரோனாவைக் கட்டுப்படுத்தும் விடயத்தில், உலக சுகாதார அமைப்பு மற்றும் சீனா என இருவர் மீதும் கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

முன்னதாக, உலக சுகாதார அமைப்பால் ஒரு சுயாதீனக் குழு நியமிக்கப்பட்டது. ஐ.நா சபையின் பொது சுகாதார அமைப்பு சர்வதேச அளவில் அவசர நிலையை முன்கூட்டியே அறிவித்திருக்கலாம் என அக்குழு கூறியது. அதோடு கொரோனா தொடர்பாக சீனா விரைவாக போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் கூறியுள்ளது.

இதுவரை, இந்தியா, சீனா, ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் தங்களுக்கென தனியாக கொரோனா தடுப்பு மருந்துகளைக் கண்டுபிடித்துக் கொண்டன. மற்ற நாடுகள், பைசர் நிறுவனத்தின் தடுப்பூசியை பயன்படுத்தி வருகின்றன. இதில் பெரும்பாலான நாடுகள், தடுப்பூசியை தங்கள் சொந்த நாட்டு மக்களுக்கு விநியோகித்துக் கொள்வதற்கே முன்னுரிமை கொடுத்துக் கொண்டன.

### உலக சுகாதார அமைப்பின் தலைவர் கூறியது என்ன?

“நான் வெளிப்படையாக பேச வேண்டும். உலகம் தார்மீக ரீதியில் பெரிய தோல்வியைச் சந்திக்கவிருக்கிறது. இந்த தார்மீக ரீதியிலான தோல்விக்கு, ஏழை நாடுகளிலுள்ள உயிர்களும் அவர்களின் வாழ்கையும் தான் விலையாகக் கொடுக்கப்படும்” என நேற்று (ஜனவரி 18, திங்கட்கிழமை) நடந்த உலக சுகாதார அமைப்பின் செயற்குழுக் கூட்டத்தில் பேசினார் டெட்ரோஸ்.




“முதலில் எனக்கு தான் தடுப்பூசி என்கிற அணுகுமுறை, நம்மை நாமே தோற்கடித்துக் கொள்ளும் விதத்தில் அமையும். இது தடுப்பூசியின் விலையை அதிகரிக்கும், பதுக்கலை ஊக்குவிக்கும். இது போன்ற செயல்களால் கொரோனா நீண்ட நாட்களுக்கு நம்மிடையே நீடிக்கும்” என்றார் டெட்ரோஸ்.

எல்லா நாடுகளும் முழுமையாக கோவேக்ஸ் (உலக அளவில் கொரோனா தடுப்பூசியை பகிர்ந்து கொள்ளும் திட்டம்) திட்டத்தில் பங்கெடுக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு அழைப்பு விடுத்திருக்கிறது. இந்த திட்டம் அடுத்த மாதம் தொடங்கவிருக்கிறது.

எதிர்வரும் 2021 ஏப்ரல் 7ஆம் திகதிக்குள் (உலக சுகாதார தினத்தன்று), உறுப்பு நாடுகள் அனைத்திலும், கொரோனா மற்றும் சமத்துவமின்மையை எதிர்கொண்டு வரும் வகையில், நம்பிக்கையின் அடையாளமாக கொரோனா தடுப்பூசி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றார் டெட்ரோஸ்.

இதுவரை 180 நாடுகள் கோவேக்ஸ் திட்டத்தில் கையெழுத்திட்டிருக்கின்றன. இந்த திட்டத்துக்கு உலக சுகாதார அமைப்பும், சர்வதேச அளவில் கொரோனா தடுப்பூசியை ஆதரிக்கும் குழுக்களும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. உலக நாடுகளை ஒன்றிணைக்க வேண்டும், அப்போதுதான் நாடுகள் சார்பாக, மருந்து நிறுவனங்களிடம் பேரம் பேசும் வலிமையை அதிகரிக்க முடியும் என்பது தான் இதன் நோக்கம்.

இந்த திட்டத்தில் இருக்கும் 92 ஏழை மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கான கொரோனா தடுப்பூசிக்கான நிதி நன்கொடையாளர்கள் மூலம் திரட்டப்படும்.

“ஐந்து மருந்து உற்பத்தியாளர்களிடமிருந்து 200 கோடி டோஸ் கொரோனா தடுப்பு மருந்தைப் பெற்றிருக்கிறோம். பிப்ரவரியில் இருந்து விநியோகத்தைத் தொடங்கவிருக்கிறோம்” என டெட்ரோஸ் கூறியுள்ளார்.

### டெட்ராஸ் கூறியதற்கு உலக நாடுகளின் பதில் என்ன?

“உலக நாடுகள் அனைத்தும் கொரோனா தடுப்பூசி பெறுவதை உறுதி செய்யும் கோவேக்ஸ் திட்டத்தை நிதி ரீதியாக பெரிய அளவில் ஆதரிக்கும் நாடு பிரிட்டன்” என பிரிட்டனின் சுகாதார செயலர் மேட் ஹேன்காக் கூறியுள்ளார்.

பிரிட்டன் இதுவரை கோவேக்ஸ் திட்டத்துக்கு 734 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருக்கிறது.

பிரிட்டன் அரசின் தரவுகள் படி, இதுவரை 40 லட்சத்துக்கும் மேற்பட்ட பிரிட்டன் நாட்டு மக்கள் கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றிருக்கிறார்கள்.

‘மக்கள் தடுப்பூசி கூட்டமைப்பு’ என்ற தடுப்பு மருந்துக்கு ஆதரவாக பிரசாரம் செய்யும் அமைப்பு, பணக்கார நாடுகள் கொரோனா தடுப்பூசியைப் பதுக்குவதாகக் குற்றம்சாட்டியது. அதோடு ஏழை நாடுகளிலுள்ள மக்களுக்கு கொரோனா தடுப்பூசி இல்லாமல் போகலாம் எனக் கூறப்பட்டது.

70 ஏழை நாடுகள் தங்கள் மக்களில் 10இல் ஒருவருக்கு மட்டுமே கொரோனா தடுப்பூசியை வழங்க முடியும் என்று அந்த அமைப்பு எச்சரித்திருந்தது.

### கொரோனா தடுப்பூசி யாருக்கு, எங்கே, எப்போது கிடைக்கும்?

கொரோனா தடுப்பூசி: 447 பேருக்கு எதிர்மறை விளைவுகள் 3 பேர் மருத்துவமனையில் அனுமதி குறிப்பாக கனடா கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானது. கனடா தன் நாட்டு மக்களுக்குத் தேவையான தடுப்பூசியை விட ஐந்து மடங்கு அதிகமாக கொரோனா தடுப்பூசிக்கு ஆர்டர் கொடுத்திருப்பதாகக் கூறப்பட்டது.

“இதுவரை தடுப்பு மருந்துகள் வந்து சேரவில்லை என்பதால், கனடா அதிக கொரோனா தடுப்பூசிகளை பதுக்குகிறது என்பது அனுமானத்தின் அடிப்படையிலானது” என கனடாவின் சர்வதேச மேம்பாட்டுத் துறை அமைச்சர் கரினா கோல்ட் கடந்த மாதம் கூறியிருந்தார். அதோடு வளரும் நாடுகள் கொரோனா பிரச்சனையை சமாளிக்க, கனடா 380 மில்லியன் அமெரிக்க டாலரை நன்கொடையாக வழங்கிக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

### உலக சுகாதார அமைப்பு,சீனா மீதான விமர்சனங்கள் என்ன?

உலக சுகாதார அமைப்பால் நியமிக்கப்பட்ட சுயாதீன நிபுணர்கள் குழு தன் இடைக்கால அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறது. அதில், உலக சுகாதார அமைப்பு மற்றும் சீனா ஆகிய இருவருமே, கொரோனாவின் ஆரம்ப காலத்திலேயே விரைவாகச் செயல்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளது.

2019ஆம் ஆண்டின் இறுதியில், வுஹானில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்ட உடனேயே விரைவாகச் செயல்பட்டு, கொரோனா வைரஸை அந்த நகரத்திலேயே கட்டுப்படுத்தியிருக்க வேண்டும் என்கிறது அவ்வறிக்கை.

அத்தோடு, உலக சுகாதார அமைப்பு 2020 ஜனவரி 30ஆம் திகதி தாமதமாக அவசர நிலையை அறிவித்ததையும் நிபுணர்கள் விமர்சித்திருக்கிறார்கள்.

“உலக அளவில்பெருந்தொற்று குறித்து எச்சரிக்கும்அமைப்பு தேவையானதை செய்யக்கூடியதாக இல்லை. உலக சுகாதார அமைப்பு அப்பணியைச்செய்ய போதுமான அதி கார பலம் கொண்டதாக இல்லை” என்கிறது நிபுணர் கள் குழுவின் அறிக்கை. நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் ஹெலென் க்ளார்க் மற்றும் லைபீரியாவின் முன்னாள் அதி பர் எலென் ஜான்சன் சர்லீப் ஆகியோர் இந்தக் குழுவை வழிநடத்தினர். ■

# அரசின் மோசமான பாசிச போக்கின் வெளிப்பாடுதான் இராணுவப் பயிற்சி

## எதிர்க்கட்சி கடும் விசனம்



கொழும்பு,ஜன.20

**ஜனநாயகத்தின் பிரதான விடயமாகக் காணப்படும் கருத்து சுதந்திரத்தை முடக்க முயற்சிக்கும் அரசாங்கம், எதிர்வரும் காலங்களில் நாட்டில் பாசிசவாத இராணுவ ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்கான முன்னேற்பாடாக 18 வயதுக்கும் மேற்பட்டோருக்கு இராணுவப் பயிற்சி வழங்கத் தீர்மானித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அனைத்து வழிகளிலும் தோல்வியடைந்துள்ள அரசாங்கம் தற்போது கருத்து சுதந்திரத்தையும் ஒழிக்க முயற்சிக்கின்றது. ஜனநாயக ரீதியாக முன்னோக்கி பயணிக்க வேண்டிய நாட்டில் கருத்து சுதந்திரத்தை முடக்க முயற்சிக்க வேண்டாம் என்று ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறிருக்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இராணுவப் பயிற்சியளிக்க தயாராகவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறியிருக்கிறார்.

இதன் மூலம் எதிர்வரும் காலங்களில் நாட்டில் பாசிசவாத இராணுவ ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. சிவில் சமூகத்தில் இராணுவப் பயிற்சியை வழங்க முயற்சிப்பதன் மூலம் அவர்களின் மனோபாவத்தை மாற்ற முயற்சிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று மக்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களது பிரச்னைகளை அறிந்து தீர்வு பெற்றுக்கொடுப்போம் என்று தேர்தல் காலத்தில் சஜித் பிரேமதாஸ கூறினார். இதனை ஆளுந்தரப்பு கடுமையாக விமர்சித்தது. ஆனால் தற்போது அந்த யோசனையை ஜனாதிபதி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்- என்றார்.(எ)

# ‘ஆசிய வலயத்தில் இலங்கையிலேயே சிவில் பரிபாலனம் மிகவும் மோசம்’

கொழும்பு,ஜன.20

நாட்டில் தற்போது கொரோனா தொற்று பரவல் நிலை தீவிரமடைந்துள்ளது என முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஆசிய வலயத்தில் சிவில் பரிபாலனம் மிகவும் மோசமான முறையில் செயல்படும் நாடாக எமது நாடு மாறியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# தொழில் நிலையங்களில் விசேட கண்காணிப்பு

## அஜித் ரோஹண தெரிவிப்பு



கொழும்பு,ஜன.20

கொழும்பிலிருந்து தூர பிரதேசங்களுக்கு பொதுப்போக்குவரத்து வாகனங்களில் செல்லும் பயணிகள் மற்றும் மேல் மாகாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளை இலக்குவைத்து மீண்டும் அன்ரிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்போது மேல் மாகாணத்திலுள்ள தொழில் நிலையங்கள் தொடர்பில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மேல் மாகாணத்தில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய மேல் மாகாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளுக்காக 11 இடங்களில் அன்ரிஜென் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்போது கொழும்பிலிருந்து தூரப் பிரதேசங்களுக்கு பொது வாகனங்களில் செல்லும் பயணிகளை இலக்குவைத்தும் அன்ரிஜென் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிலையில் மேல் மாகாணத்திலுள்ள தொழில் நிலையங்களில் சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றதா? என்பது தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைய சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து பொலிஸாரும் இந்த சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாகச் செயல்படுவதாக அடையாளம் காணப்படும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

இந்த செயல்பாடுகளின்பாது சுகாதாரப் பிரிவினரால் அன்ரிஜென் பரிசோதனைக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அதற்கு மறுப்புத் தெரிவிக்காமல் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதன்போது விவரங்கள் சேகரிக்கப்பட்டால், உண்மை விவரங்களை மாத்திரமே வழங்கவேண்டும்.

இவ்வாறு உண்மைத் தகவல்களை வழங்குவதன் மூலமே வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டால் அவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பு பேணியவர்கள் ஆகியோரை அடையாளம் கண்டு வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான செயல்பாடுகளை முன்னெடுக்க முடியும். எவரேனும் போலியான தகவல்களை வழங்கினால் வைரஸ்பரவலைக் கட்டுப்படுத்துவதில் மேலும் சிக்கல் ஏற்படும்- என்றார். (எ)

# வலம்புரி சங்குடன் 06 பேர் சிக்கினர்

அம்பலாங்கொடை,ஜன.20

வலம்புரி சங்கு ஒன்றை 20 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் அம்பலாங்கொடைப் பகுதியில் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேற்று அதிகாலை முன்னெடுத்த விசேட நடவடிக்கையின்போது இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேக நபர்கள் பயன்படுத்திய சொகுசு ஜீப்பொன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (எ)



# வடக்கு - கிழக்கில் மழை அதிகரிக்கும்

கொழும்பு,ஜன.20

வடக்கு - கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை இன்றும் சிறிதளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு - கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

காலியிலிருந்து கொழும்பு, புத்தளம் மற்றும் காங்கேசந்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் வடமேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அந்த கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வெறுப்பு உணர்வு தூண்டியவர் 90 நாள்கள் தடுப்புக்காவலில்

கொழும்பு,ஜன.20

இனங்களுக்கு இடையே குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் வெறுப்புணர்வைத் தூண்டும் கருத்துக்களை முகப்புத்தகம் மூலம் வெளியிட்டதாகக் கூறி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட தெஹிவளையைச் சேர்ந்த பசால் மொஹமட் நிசாரை உடனடியாக சி.ஐ.டி.யின் தடுப்புக்காவலின் கீழ் கொண்டு வந்து தடுத்து வைத்து விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேக நபரின் வங்கிக் கணக்கொன்றில் இருந்த சந்தேகிக்கத்தக்கதான பெருமளவு பணப் பரிமாற்றலை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தேக நபரின் கணனி பாகங்களை சி.ஐ.டி.யின் டிஜிற்றல் பகுப்பாய்வுப் பிரிவு ஆராய்ந்தபோது, அதிலிருந்து அடிப்படைவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியுமான பல விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே சி.ஐ.டி. எனப்படும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணனி குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் சேனாரத்ன கொழும்பு பிரதான நீதிவான் மொஹமட் மிஹால் முன்னிலையில் நேற்று இந்த விடயங்களை முன்வைத்ததுடன் அதனை ஆராய்ந்த நீதிவான், இந்த சந்தேக நபரை உடனடியாக சி.ஐ.டியிடம் ஒப்படைக்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார்.

நேற்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் வழக்கு மீள விசாரணைக்கு வந்தது. சந்தேக நபருக்கு எதிராக 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பிலான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் 3 (1) ஆம் உறுப்புரைக்கு அமையவும், தண்டனை சட்டக் கோவையின் 120 ஆம் அத்தியாயத்தின் கீழும், 20017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினி குற்றங்கள் தொடர்பிலான சட்டத்தின் 6 (1) ஆம் அத்தியாயத்தின் கீழும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே சி.ஐ.டி. 1978 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் சந்தேக நபருக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிப்பதாகக் கூறி அவரை 90 நாள் தடுப்புக் காவலில் எடுக்க நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தது. (எ)

# பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்துவதே கொரோனா தொற்றிலிருந்து விடுபட ஒரேவழி

## மருத்துவர் சுதத் சமரவீர தெரிவிப்பு



கொழும்பு,ஜன.20

**கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த சமூகத்திலிருந்து பாதிக்கப்பட்ட நபர்களைத் தனிமைப்படுத்துவதை விரைவுபடுத்துவது அவசியம்.**

**அவ்வாறு மேற்கொள்வதே கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய நடவடிக்கைகள் என தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி விசேட மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

மேலும் நாளொன்றுக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தற்போது சுகாதார அதிகாரிகள் பி.சி.ஆர். பரிசோதனைகளை போதுமான அளவு மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் மேலும் பரவாமல் பார்த்துக்கொள்ள சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் மக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# ரஞ்சனின் இந்நிலைக்கு ஐ.தே.கவே காரணம்!

கொழும்பு,ஜன.20

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்டிருக்கும் நீதிமன்றத் தீர்ப்புக்கு ஒட்டுமொத்த ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுமே காரணம். அவர்களின் கோரிக்கைக்கமையவே ரஞ்சன் வழக்குகள் தொடர்பில் நீதிபதிகளுடன் உரையாடல்களை மேற்கொண்டிருந்தார் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ரஞ்சனுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பு தொடர்பில் நானும் வருத்தப்படுகின்றேன். அவர் மீதான அனுதாபத்தால் அவருக்கு எதிராக நான் தொடுத்திருக்கும் 2 வழக்குகளை வாபஸ் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றேன். அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டால் ரஞ்சன் மேலும் 4 வருடங்கள் சிறையில் இருக்க வேண்டிவரும்.

அத்துடன் ரஞ்சனுக்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சக்தியினர் கதைப்பதில் நியாயம் இருக்கின்றது. ஏனெனில் கடந்த அரசாங்கத்தில் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களின் தேவைக்காகவே ரஞ்சன் நீதிபதிகளுடன் உரையாடல்களை மேற்கொண்டார். அவர்களுக்காக செயல்பட்டதன் விளைவை ரஞ்சன் இன்று அனுபவிக்கிறார்- என்றார். (எ)

# யாழ். கட்டளைத் தளபதி கடமைகளை பொறுப்பேற்பு



யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ். மாவட்ட புதிய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பலாலி இராணுவக் கட்டளைத் தலைமையகத்தில் இடம்பெற்ற சம்பிரதாய நிகழ்வுகளையடுத்து தனது கடமைகளை அவர் பொறுப்பேற்றார்.

மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா, வன்னிப் பிராந்தியக் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றியதுடன் இராணுவ உயர்பீடத்தில் முக்கிய பொறுப்புக்களையும் வகித்துள்ளார்.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் செனரத் பண்டார இலங்கை இராணுவத்தின் 57ஆவது தலைமைத் தளபதியாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (எ)

# 33 இந்திய மீனவர்கள் நேற்று நாடு திருப்பினர்

கொழும்பு,ஜன.20

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 33 இந்திய மீனவர்கள் நேற்றுக் காலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை செல்லும் இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் மூலம் இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை இந்தியா அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (எ)

# அன்ரிஜென் சோதனையில் 203 பேருக்கு தொற்றுறுதி

## மேல் மாகாணத்தில் 103 பேர் அடையாளம்

கொழும்பு,ஜன.20

மேல் மாகாணத்தில் கடந்த 29 நாள்களுக்குள் 18 ஆயிரத்து 149 பேர் அன்ரிஜென் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுள் 203 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேல் மாகாணத்தில் தொடர்ந்தும் இவ்வாறான பரிசோதனைகள் இடம்பெறும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மேல் மாகாணத்தில் கடந்த தினங்களில் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய, கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் இதுவரையில் 18 ஆயிரத்து 149 பேர் அன்ரிஜென் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுள் 203 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்போது 15 ஆயிரத்து 909 பேருக்கு அன்ரிஜென் பரிசோதனைகளும், 2 ஆயிரத்து 240 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன- என்றார். (எ)

# ஜனாதிபதியை சுயதனிமைப்படுத்த அவசியமில்லையா?

கொழும்பு,ஜன.20

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவும் ரயர் உற்பத்தி தொழிற்சாலை திறப்பு விழாவில் கலந்து கொண்ட நிலையில் பியல் நிஷாந் தவுக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அப்படியென்றால் ஜனாதிபதியை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த அவசியமில்லையா? என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். (எ)

# 1000 ரூபா பெறுமதி குறையும் வரையில் தொழிலாளருக்கு சம்பள உயர்வில்லை

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு



கொழும்பு,ஜன.20

1000 ரூபா என்பது இன்னமும் மதிப்பிழந்து, 500 ரூபாய்க்கு சமனாகும் வரை அடிப்படைச் சம்பளம் 1000 ரூபாயாக அதிகரிக்கப்படாது என முன்னாள் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் மேலும் தெரிவித்துள்ள அவர், "தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில், அவர்களது நாள் சம்பளம் பற்றிய கோஷம்தான் கடந்த பல்லாண்டுகளாக எப்போதும் உரக்கக் கேட்டது.

இன்றைய தோட்ட நிர்வாக அமைப்பு மாறாத வரையில் அல்லது 1000 ரூபாய் என்பது இன்னமும் மதிப்பிழந்து, 500 ரூபாய்க்கு சமனாகும் வரை அடிப்படை சம்பளம் 1000 ரூபாய் கூட்டு ஒப்பந்த முறைமையின் கீழ் வழங்கப்படாது என நாம் கணித்திருந்தோம்.

ஆகவே, தான் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாகவோ, நீண்ட குத்தகைக்கோ காணி பகிர்ந்தளிக்கப்பட்டு அவர்கள் சிறுதோட்ட உரிமையாளர்-கிராமவாசிகளாக மாற்றப்படுவதே நிரந்தரத் தீர்வு எனவும் கணித்திருத்தோம்.

தொழிலாளர்களுக்கு தோட்டக்காணி பிரித்து வழங்கப்பட வேண்டும் என்று பலர் பலகாலமாய் கூறி வந்தாலும் அதை அரசியல் கோஷமாக்கி 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்வாங்கி ஆவணப்படுத்தியது தமிழ் முற்போக்கு கூட்டணியே.

இன்று இந்தக் கோஷம் அனைத்துத் தரப்புக்களாலும் முன்வைக்கப்படுவது முற்போக்கான வளர்ச்சியாகும்.

ஆனால் இந்தக் காணி பிரித்து அல்லது நீண்டகால குத்தகைக்கு வழங்கப்படுவது என்பதும் வெளிவாரி உற்பத்தி என்று கம்பனிகள் தொழிலாளருக்கு 'கண்ட்ராக்ட்' வழங்குவது என்பதும் இரு வேறு விடயங்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

தொழிலாளரைத் தொடர்ந்து சுரண்ட கம்பனிகள் விரிக்கும் சூழ்ச்சி வலை இதுவாகும்- எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# தனிமைப்படுத்தலை பின்பற்றாத 686 நிறுவனங்கள் அடையாளம்

கொழும்பு,ஜன.20

மேல் மாகாணத்திலுள்ள அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பல் பொருள் அங்காடிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது, தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புச் சட்டவிதிகளுக்குப் புறம்பாகச் செயல்பட்டதாக 686 நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில் அவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்தில் இதுவரையில் 4 ஆயிரத்து 134 நிறுவனங்களை, சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து சோதனை செய்துள்ளனர். அவற்றுள் 3 ஆயிரத்து 448 நிறுவனங்கள் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளைப் பின்பற்றியிருந்ததுடன், எஞ்சிய 686 நிறுவனங்களில் இந்த சட்டவிதிகள் கடைப்பிடிக்கப்படவில்லை. இந்த நிறுவனங்களின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் பணிப்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது- என்றார். (எ)

ஈழநாடு



## பாதுகாப்பு படையினரே தாக்குதல் நடத்தக்கூடிய அச்சுறுத்தல் நிலைமை

# அமெரிக்க ஜனாதிபதியாக பைடன் இன்று பதவியேற்பு

வாஷிங்டன், ஜன. 20

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்கும் விழாவில் பாதுகாப்பு படையினராலேயே தாக்குதல் அபாயம் அல்லது அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என அமெரிக்கப் படை அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். இதையடுத்து, விழாவில்

பாதுகாப்புப் பணிக்காக வரவழைக்கப்படும் 25 ஆயிரம் தேசிய காவல் படையினரை சோதனைக்கு உட்படுத்த மத்திய புலனாய்வு அமைப்பான எவ். பி. ஐ. நடவடிக்கை எடுத்து வருகிறது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன், துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஸ் இன்று பதவியேற்கவுள்ளனர். தலைநகர் வாஷிங்டனில் உள்ள பாராளுமன்றக் கட்டடத்தில் பதவியேற்பு விழா நடைபெறு கிறது.

முன்னதாக, ஜோ பைடனின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தின்போது, ஜனாதிபதி ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் புகுந்து கலவரத்தில் ஈடுபட்டனர். இந்த சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

இதேபோல ஜோ பைடன் பதவியேற்பு விழாவின்போதும் தாக்குதல்



நடத்தப்படலாம் என எவ்.பி.ஐ. அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். அதிலும், பதவியேற்பு விழாவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் படவுள்ள தேசிய காவல் படையினரில் சிலர் மூலமாகவே தாக்குதல் அபாயம் அல்லது அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என எவ்.பி.ஐ. கருதுகிறது.

தேசிய காவல் படை என்பது அமெரிக்க இராணுவம் மற்றும் விமானப் படையின் ஓர் அங்கமாகும். முழுநேர அரசு ஊழியர்களான இவர்கள் பகுதி நேரமாக தேசிய காவல் படையில் பணி புரிவார்கள்.

பாராளுமன்ற தாக்குதல் தொடர்பாக தேசிய காவல் படையைச் சேர்ந்த சிலரும் கைது செய்யப்பட்டனர். இவர்களில் சிலரால் ஜனாதிபதி பதவியேற்பு விழாவிலும் தாக்குதல் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து வருகின்றனர்.



## பிரான்ஸில் 'பறக்கும் டாக்சி' பரீட்சார்த்த பறப்பு ஜூனில்!

பாரிஸ், ஜன. 20

பாரிஸ் பிராந்தியத்தில் நகரங்களுக்கு இடையே குறுந்தூர போக்குவரத்துக்கு 'பறக்கும் டாக்சிகள்' (Flying taxis) எனப்படும் சிறிய வான் ஊர்திகள் 2030 ஆம் ஆண்டு முதல் சேவைக்கு வரவுள்ளன.

போக்குவரத்து நெரிசலை தவிர்க்க நகரங்களுக்கு மேலே சேவையில் ஈடுபடவுள்ள பறக்கும் டாக்சிகளின் முதலாவது பரீட்சார்த்த ஓட்டம் வரும் ஜூன் மாதம் பொந்துவாஸில் உள்ள ஓடு தளத்தில் (Pontoise aerodrome) நடத்தப்படவுள்ளது.

பறக்கும் டாக்சி சேவையை நடத்துவதற்கான டாக்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காக அவற்றைத் தயாரிக்கின்ற 30 வெளிநாட்டு நிறுவனங்களை பாரிஸ் நகர போக்குவரத்து சேவையினர் தெரிவு செய்துள்ளனர். இந் நிறுவனங்களில் ஒன்றுக்கே பாரிஸ் நகர டாக்சி சேவையை நடத்தும் வாய்ப்புக் கிட்டும். இந்த நிறுவனங்களில் முதலாவதாக ஜேர்மனியின் 'வெலோகொப்ரர்' (Volocopter) நிறுவனத்தின் டாக்சிகளே எதிர் வரும் ஜூன் மாதம் பரீட்சார்த்தப் பறப்பில் ஈடுபடுத்தப் படவுள்ளன.

பயணப் பொதிகளுடன் இரண்டு பயணிகள், ஒரு விமானி என மூவர் செல்லக் கூடிய அந்த டாக்சிகள் மணிக்கு 110 கிலோ மீற்றர்கள் வேகத்தில், 400-500 மீற்றர்கள் உயரத்தில் பறக்கக் கூடியவை.

ஹெலிக்கொப்ரர், ட்ரோன் இரண்டினதும் தொழில் நுட்பங்களை இணைத்து தயாரிக்கப்படுகின்ற இந்த சிறிய வானூர்திகளை பாரிஸ் விமான நிலையங்களின் குழுமமும், சுயுவீ போக்குவரத்து சேவை நிறுவனமும் இணைந்து சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளன.

2024 இல் பாரிஸில் நடைபெறவிருக் கின்ற சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளின் போது பாரிஸ் விமான நிலையத்தில் இருந்து பாரிஸ் டிஸ்னி லான்ட் போன்ற உல்லாச இடங்களுக்கு பறக்கும் டாக்சி சேவைகளை நடத்தப்போவதாக பிரான்ஸின் 'எயார் பஸ்' நிறுவனம் ஏற்கனவே அறிவித்திருப்பது தெரிந்ததே. (ஐ)



## நடைபாதையில் உறங்கியவர்கள் மீது லொறி ஏறியதில் 13 பேர் உயிரிழப்பு

குஜராத், ஜன. 20

வீதியோர நடைபாதையில் உறங்கிய தொழிலாளர்கள் மீது லொறி ஏறி ஏற்பட்ட விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் சூரத் நகரில் கோசாம்பா என்ற இடத்திலேயே இந்த வித்து நேற்று முன்தினம் இரவு ஏற்படுத்தப்பட்டது.

இந்த விபத்தில் இறந்தவர்கள் அனைவரும் ராஜஸ்தானைச் சேர்ந்த தொழிலாளர்கள் என்று ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் பொலிஸ் தகவல்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், இந்த விபத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர். இவர்கள் தற்போது உள்ளூர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழப்பு குறித்து இரங் கல் தெரிவித்த பிரதமர் நரேந் திர மோடி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தேசிய நிவ ரண நிதியிலிருந்து தலா 2 இலட்சம் இந்திய ரூபாவும், காய மடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் இந்திய ரூபாவும் வழங்குமாறு உத்தரவிட்டார்(ஐ)



## வெளியேறும் முன்னர் ஐரோப்பிய நாடுகளுக்கான பயண தடை நீக்கம்

### ஜனாதிபதி ட்ரம்ப் இறுதி நடவடிக்கை

வாஷிங்டன், ஜன. 20

பதவிலிருந்து வெளியேறும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜனவரி 26 முதல் இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பா நாடுகளின் பயணத் தடையை நீக்குவதற்கான அறிவிப்பை திங்கட்கிழமை வெளியிட்டார்.

கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக கடந்த மார்ச் மாதம் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளை இந்த உத்தரவு நீக்குவதுடன், பிரேசிலிலிருந்து அமெரிக்காவுக்கு பயணிகளை பயணிக்கவும் அனுமதிக்கிறது.

கொரோனா வைரஸ் பணிக்குழு உறுப்பினர்கள் மற்றும் பொது சுகாதார அதிகாரிகளின் ஆதரவைப் பெற்ற பின்னர், தொற்றுநோய்க்கு பதிலளிக்கும் விதமாக கடந்த ஆண்டு தொடக்கத்தில் அவர் விதித்த கட்டுப்பாடுகளை நீக்கும் உத்தரவில் ட்ரம்ப் திங்களன்று கையெழுத்திட்டார்.

ட்ரம்பின் இந்த உத்தரவு பகிரங்கப்படுத்தப்பட்ட உடனேயே, அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக பதவியேக்கவுள்ள ஜோ பைடனின் செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி,

எங்கள் மருத்துவக் குழுவின் ஆலோசனையின் பேரில், நிர்வாகம் இந்த கட்டுப்பாடுகளை ஜனவரி 26 ஆம் திகதி நீக்க விரும்பவில்லை என்று ருவிட் செய்துள்ளார்.

அத்துடன் தொற்றுநோய் மோசமடைந்து வருவதோடு, மேலும் தொற்று வகைகளும் உலகெங்கிலும் உருவாகி வருவதால், இது சர்வதேச பயணங்களுக்கான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான நேரம் அல்ல என்றும் அவர் மேலும் கூறினார்.

## பிரான்ஸில் புதிய வைரஸ் மார்ச் மாதம் தீவிரமாகும்!

### தேசிய சுகாதார ஆராய்ச்சி மையம்

பாரிஸ், ஜன. 20

தற்சமயம் நாடெங்கும் பரவி வருகின்ற இங்கிலாந்து வைரஸ் வரும் பெப்ரவரி மாத இறுதியில் தொடங்கி மார்ச் மாதத்தில் தீவிரமடையலாம்.

பிரான்ஸின் தேசிய சுகாதார மருத்துவ ஆராய்ச்சி மையம் இவ்வாறு மதிப்பிட்டுள்ளது.

சுகாதாரக் கட்டுப்பாடுகளை இறுக்கி தடுப்பூசி ஏற்றுவதை இயன்றவரை விரைவுபடுத்துவதன் மூலம் புதிய வைரஸின் மோசமான விளைவுகளைத் தணிக்க முடியும் என்றும் அது தெரிவித்துள்ளது.

தடுப்பூசி ஏற்றும் திட்டம் ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தைக் கவனத்தில் எடுக்காமல் நடத்தப்பட்ட மதிப்பீட்டு ஆய்வுகளின்படியே இத்தகவல் வெளியிடப்படுவதாகவும் ஆராய்ச்சி மையத்தின் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

தற்சமயம் தினசரி புதிதாக அடையாளம் காணப்படுகின்ற தொற்றாளர்களில் 1.4 வீதமாகக் காணப்படுகின்ற இங்கிலாந்து வைரஸின் தொற்று அடுத்துவரும் வாரங்களில் அதிகரிப்பைக் காட்டும். பழைய கொரோனா வைரஸை விடவும் 50 முதல் 70 வீதம் கூடிய பரவும் வேகம் கொண்டது என்பதால் புதிய வைரஸ் தொற்றினால் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கையும் பெப்ரவரி - ஏப்ரல் மாதங்களுக்கு இடையே நாளாந்தம் 20 ஆயிரம் என்ற அளவை எட்டலாம்." - இவ்வாறு தேசிய சுகாதார மருத்துவ ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் மிக மோசமான சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கின்ற VOC 202012/01 என அழைக்கப்படும் புதிய வைரஸை "பைசர் - பயோஎன்ரெக்" தடுப்பூசி தடுக்கும் திறன் கொண்டுள் ளது என்று அதனைத் தயாரித்த கூட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆனால் பைசர் தடுப்பூசி தயாரிப்பு வேகம் அதன் அவசர தேவையை ஈடு செய்யும் அளவுக்கு இல்லாதிருப்பதால் பிரான்ஸ் உட்பட பல நாடுகளுக்கு உறுதி அளித்தபடி அவற்றை விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஊசி ஏற்றும் பணிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ)

# 32 ஆண்டுகளின் பின்னர் இந்தியா சாதனை வெற்றி

## பந்த், கில், புஜாரா அபாரம்



பிரிஸ்பேன், ஜன. 20

ரிஷப் பந்த், ஷுப்மன் கில் ஆகியோரின் ஆகச்சிறந்த துடுப்பாட்டத்தால் பிரிஸ்பேனில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி மற்றும் 4ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வரலாற்று வெற்றி பெற்றது.

328 ஓட்டங்கள் இலக்கைத் துரத்திச் சென்ற இந்திய அணி, 97 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 329 ஓட்டங்களை சேர்த்து 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ரிஷப் பந்த் 89 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்து அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தார்.

ஆட்ட நாயகன் விருது ரிஷப் பந்த்துக்கும், தொடர் நாயகன் விருது அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் பட் கம்மின்ஸூக்கும் வழங்கப்பட்டது. இந்த வெற்றி மூலம் டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் 430 புள்ளிகளுடன் 71.7 சதவீத வெற்றியுடன் முதலிடத்தை இந்தியா பிடித்தது. ஆஸி. அணி 3-வது இடத்துக்கு பின்தங்கியது.

அவுஸ்திரேலிய அணியின் கப்டன் ரிம் பெய்ன் இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து இரு டெஸ்ட் தொடர்களை இழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியில், முதல் இனிங்ஸில் ஆஸி. அணி 369 ஓட்டங்களும், இந்திய அணி 326 ஓட்டங்களும் சேர்த்தன.

இரண்டாவது இனிங்ஸில் ஆஸி. அணி 294 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து. இதனால், 328 ஓட்டங்கள் என்ற இலக்கை இந்திய அணிக்கு நிர்ணயித்தது. 98 ஓவர்களில் 328 ஓட்டங்கள் என்ற இலக்கை அடைய வேண்டிய நிர்பந்தத்தில் களமிறங்கிய இந்திய அணி ஒரு ஓவர் மீதமிருக்கையில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வரலாற்று வெற்றி பெற்றது.

இதன் மூலம் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி, போர்டர்-கவாஸ்கர் கிண்ணத்தைத் தொடர்ந்து 2ஆவது முறையாகக் கைப்பற்றியுள்ளது.

இந்திய அணியின் கப்டன் கோலி இல்லாத நிலையில், கப்டன் பொறுப்பேற்றுச் செயல்பட்ட ரஹானே தலைமையில் இந்திய அணி வெல்லும் முதல் டெஸ்ட் தொடர் இதுவாகும். இதுவரை ரஹானே தலைமை ஏற்று 5 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி தோல்வி அடையவில்லை என்பதைத் தொடர்ந்து பதிவு செய்துள்ளது. டோனிக்கு அடுத்து வெற்றிகரமான கப்டனாக டெஸ்ட் போட்டியில் ரஹானே தொடர்ந்து வருகிறார்.

பிரிஸ்பேனின் காபா மைதானத்தில் இதுவரை அதிகபட்சமாக 236 ஓட்டங்களை துரத்தி வென்றதே அதிகபட்ச ஓட்டமாகும். இந்த சாதனை 69 ஆண்டுகளுக்கு பின்னர் இந்திய அணியால் முறியடிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், கடந்த 1988ஆம் ஆண்டுக்குப் பின் காபா மைதானத்தில் நடந்த எந்த டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி தோல்வியைச் சந்தித்ததில்லை. 33 ஆண்டுகளின் பின்னர் இந்த சாதனையும் தகர்ந்துள்ளது.

கடைசி நாளான நேற்று 324 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் ரோஹித் சர்மா, ஷுப்மன் கில் களமிறங்கினர். ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ரோஹித் சர்மா 7 ஓட்டங்களுடன் கம்மின்ஸ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த புஜாரா, கில்லுடன் சேர்ந்தார். இருவரும் அவுஸ்திரேலிய பந்துவீச்சை சமாளித்து ஆடினர். அதிலும் புஜாராவை ஆட்டமிழக்க செய்ய அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் பல உத்திகளை கையாண்டனர். ஆனாலும், புஜாரா சுவராக நின்று துடுப்பாட்டம் செய்தார். மறுபுறம் கில் தனக்கே உரிய ஷொட்களை ஆடி அசத்தினார். ஸ்ராரக்கின் ஓவரில் சிக்ஸரையும், பௌண்ட்ரியையும் விளாசி வியக்க வைத்தார்.

உணவு இடைவேளை வரை இந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 83 ஓட்டங்களை சேர்த்திருந்தது.

சிறப்பாக ஆடிய ஷுப்மன் கில் அரைச்சதம் அடித்து 91 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதில் 8 பௌண்ட்ரி, 2 சிக்ஸர்கள் அடங்கும். இருவரும் இரண்டாவது விக்கெட்டுக்கு 114 ஓட்டங்கள் சேர்த்து பிரிந்தனர். அடுத்துவந்த ரஹானே 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 4ஆவது விக்கெட்டுக்கு புஜாரா, ரிஷப் பந்த் கூட்டணி ஆட்டத்தின் போக்கை மாற்றியது. இருவரும் சேர்ந்து 61 ஓட்டங்களை சேர்த்தனர். நிதானமாக ஆடிய புஜாரா அரைச் சதம் அடித்து 56 ஓட்டங்களுடன் கம்மின்ஸின் பந்துவீச்சில் வெளியேறினார்.

தனது 100ஆவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய நதன் லியோன் பந்துவீச்சை ரிஷப் பந்த் வெளுத்து வாங்கினார். மயங்க் அகர்வால் வந்த வேகத்தில் 9 ஓட்டங்களுடன் கம்மின்ஸிடம் விக்கெட்டை இழந்தார்.

முதல் இனிங்ஸில் அரைச்சதம் அடித்த வாஷிங்டன் சுந்தர் களமிறங்கி இந்த முறையும் சில அற்புதமான ஷொட்களை ஆடினார். அதிலும் உலகின் சிறந்த வேகப்பந்துவீச்சாளரான கம்மின்ஸ் பந்துவீச்சில் சிக்ஸர் விளாசி சுந்தர் அசத்தினார். 24 ஓட்டங்களில் சுந்தர் ஆட்டமிழந்தார்.

மனம் தளராமல் ஆடிய ரிஷப் பந்த், ஸ்வீப் ஷொட்கள், கட் ஷொட்கள், டிரைவ் ஷொட்களை ஆடி அனைவரையும் அசத்தினார். தாகூர் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

97 ஓவர்களில் இந்திய அணி 329 ஓட்டங்களை சேர்த்து 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது. ரிஷப் பந்த் 89 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆஸி. அணி தரப்பில் கம்மின்ஸ் 4 விக்கெட்களையும், லியோன் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.



# இந்திய அணிக்கு ரூ. 5 கோடி பரிசு அறிவித்தது பி.சி.சி.ஐ.

சிட்னி, ஜன. 20

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான அலன் போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்தை தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக கைப்பற்றிய அணிக்கு 5 கோடி இந்திய ரூபாவை பரிசுத் தொகையாக அறிவித்துள்ளது அந்நாட்டு கிரிக்கெட் சபை.

பிரிஸ்பேனில் நடந்த அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான கடைசி மற்றும் 4ஆவது டெஸ்ட் போட்டியை 3 விக்கெட்டால் வென்றது இந்திய அணி. இதனால், டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் வென்றது.

பிரிஸ்பேன் காபா மைதானத்தில் கடந்த 32 ஆண்டுகளாக அவுஸ்திரேலிய அணியை எந்த அணியும் வீழ்த்தியதில்லை என்ற வரலாற்றை மாற்றி இந்திய அணி இந்த வெற்றி மூலம் எழுதியுள்ளது.

இந்திய அணியின் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை அடுத்து ஐந்து கோடி இந்திய ரூபாவை பரிசாக அறிவித்துள்ளது.

இந்த வெற்றி தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடி "அவுஸ்திரேலியாவில் இந்திய அணி பெற்ற வெற்றியை நினைத்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். இந்திய அணியின் குறிப்பிடத்தக்க ஆற்றல், உணர்ச்சிப் பெருக்கு தொடர் முழுவதும் இருந்தது. உறுதியான மனோதிடம், போராட்ட குணம் போன்றவற்றை இந்திய அணியினர் வெளிப்படுத்தினார்கள். எதிர்கால முயற்சிகளுக்கும், வெற்றிக்கும் வாழ்த்துக்கள்" என்று ருவிட்டரில் பதிவிட்டுள்ளார். (ஐ)

# ஜோகொவிச் மீது கடும் விமர்சனம்



சிட்னி, ஜன. 20

அவுஸ்திரேலிய ஓப்பன் தொடரில் பங்கொள்ளும் வீரர்களுக்கான தனிமைப்படுத்தல் விதிகளை தளர்த்துமாறு உலகின் முதல்நிலை வீரர் அதிகாரிகளை வலியுறுத்தியதையடுத்து, நோவக் ஜோகோவிச் அவுஸ்திரேலிய வீரர் நிக் கிர்கியோஸால் விமர்சிக்கப்பட்டார்.

எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி ஆரம்பமாகும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓப்பனுக்காக கடந்த வாரம் 1,200 க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் ஊழியர்கள் அவுஸ்திரேலியா சென்றுள்ளனர்.

இதன்போது வீரர்கள் சென்ற மூன்று விமானங்களில் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 72 வீரர்கள் 14 நாட்கள் தங்கள் ஹோட்டல் அறையில் முழு நேரம் தனிமைப்படுத்தலில் இருக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்களும், அவுஸ்திரேலிய அதிகாரிகளும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் தனிமைப்படுத்தலில் இருக்கும் சில வீரர்களின் விரக்தியை எடுத்துக் காட்டிய சேர்பிய வீரர் ஜோகோவிச், வீரர்களுக்கான தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளை குறைக்குமாறு கேட்டார். ஆனால், அவரது பரிந்துரைகள் விக்டோரியா மாநில அதிகாரிகளால் மறுக்கப்பட்டதுடன், மாநிலப் பிரதமர் டேனியல் ஆண்ட்ரூஸ் பொதுமக்களைப் பாதுகாக்க கட்டாய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் அவசியம் என்றும் கூறினார்.

இது இவ்வாறிருக்க ஜோகோவிச்சின் கோரிக்கையை எடுத்துக் காட்டி அவுஸ்திரேலிய வீரரான நிக் கிர்கியோஸ் 'ஜோகோவிச் ஒரு கருவி' என தனது ருவிட்டர் பக்கத்தில் விமர்சித்துள்ளார்.

"கடந்த ஆண்டு சேர்பியர்கள் ஒரு கண்காட்சி நிகழ்வை ஏற்பாடு செய்த பின்னர், ஜோகோவிச்சும் ஏனையவர்களும் வைரஸால் பாதிக்கப்பட்டனர். நீங்கள் (ஜோகோவிச்) எல்லா நெறிமுறைகளையும் புறக்கணிக்கும் போது அதுதான் நடக்கும். இது ஒரு நகைச்சுவையான விடயம் அல்ல", என்றும் கூறியுள்ளார்.

# சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு கொரோனா தொற்று தடையில்லை

## 7,630 படையினர் பங்குபற்றுவார்கள் கம்பீரம் குறையாது என்கிறார் கமால்



கொழும்பு,ஜன.20

**உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு முகங்கொடுத்துள்ள போதிலும் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 4 ஆம் திகதி கொண்டாடப்படுவதைப் போன்று இம்முறையும் கம்பீரம் குறையாதவாறு அதேவேளை கடுமையான சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய 73 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இடம்பெறும் எனவும் அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணர்தன தெரிவித்துள்ளார்.**

இம்முறை சுதந்திர தின அணி வகுப்பில் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், விசேட அதிரடிப்படை, சிவில் பாதுகாப்புப்படை, மற்றும் தேசிய மாணவர் படையணி என்பவற்றின் என்பன சார்பில் 7 ஆயிரத்து 630 படைவீரர்கள் பங்குபற்றுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் தொடர்பில் கொழும்பில் ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் விசேட கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊடக அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த வருடத்தைப் போன்று சுதந்திர சதுக்கத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இடம்பெறும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு விசேட பிரதிநிதிகள் இந்நிகழ்வில் விருந்தினர்களாக பங்குபற்றுவார்கள்.

சுதந்திர தின அணிவகுப்புக்கள் மற்றும் கலாசார நிகழ்வுகளில் கலந்து கொள்கின்ற அனைவருக்கும் அன்ரிஜென் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும்.

சுதந்திர தினத்துக்கு முன்னர் நடைபெறும் மத வழிபாடுகள் பெப்ரவரி 2 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். பெப்ரவரி 3 ஆம் திகதி மருதானை விகாரையில் தான நிகழ்வு இடம்பெறும். ஏனைய சர்வமத வழிபாடுகள் சுதந்திர தினத்தன்று நடைபெறும்.

அதற்கமைய பௌத்த மத வழிபாடுகள் காலை 6.30க்கு நாரஹேன்பிட்டியவிலுள்ள அபயராம விகாரையிலும் , இந்து மத வழிபாடுகள் பம்பலபிட்டி புதிய கதிரேசன் ஆலயத்திலும் காலை 6.35 மணிக்கு இஸ்லாம் மத வழிபாடுகள் கொழும்பு- 4 நிமல்பாதை மஜ்மாயில் கமிராத் ஜூம்மா பள்ளிவாசலிலும், காலை 7.15 மணிக்கு கிருஸ்தவ வழிபாடுகள் பொரளை தேவாலயத்திலும் நடைபெறும்.

அதனையடுத்து முப்படையினரின் மரியாதை அணி வகுப்பு நடைபெறும். இதில் 3171 இராணுவத்தினரும், 808 கடற்படையினரும், 997 விமானப்படையினரும், 664 பொலிஸாரும், 432 விசேட அதிரடிப் படையினரும், 558 சிவில் பாதுகாப்புப்படையினரும், 336 தேசிய மாணவர் படையணியினரும் பங்குபற்றுவார்கள். இதனைத் தொடர்ந்து கலாசார அணி வகுப்பு இடம்பெறும்.

இதில் முப்படை, சிவில் பாதுகாப்புப்படை, பொலிஸ், தேசிய இளைஞர் பாதுகாப்புப் படை மற்றும் மாகாண சபை கலாசார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடகக் கலைஞர்கள் உள்ளிட்ட 341 பேர் பங்குபற்றுவார்கள்- என்றார். (எ)

# பாடசாலைகளில் இவ்வாரம் மாணவர் வருகை அதிகரிப்பு

கொழும்பு,ஜன.20

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகை இவ்வாரம் அதிகரித்துள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இரண்டாம் வாரத்தின் முதலாம் நாளான நேற்றுமுன்தினம் 65 சதவீத மாணவர்களும், 86 சதவீத ஆசிரியர்களின் வருகையும் பதிவாகியுள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் பேரா சிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

இதன்படி வடமேற்கு மாகாணத்தில் இரு பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் ஏனைய பாடசாலைகளில் 70 சதவீத வருகை பதிவாகியுள்ளது.

தொடர்ந்து மிகக் குறைந்த வருகையைப் பதிவு செய்துள்ள தெற்கு மாகாணத்தில் 54 சதவீத வருகை பதிவாகியுள்ளதுடன் அங்கு மூன்று பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

சப்ரகமுவ மாகாணத்தில் 14 பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் அங்கு 65 சதவீத வருகை பதிவாகியுள்ளது.

வடமத்திய மாகாணத்தில் ஒரு பாடசாலை மூடப்பட்டுள்ள நிலையில் அங்கு 66 சதவீத வருகை பதிவாகியுள்ளது.

மத்திய மாகாணத்தில் ஐந்து பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் அங்கு 62 சதவீத வருகை பதிவாகியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மூன்று பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் 70 சதவீத வருகை பதிவாகியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 26 பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் அங்கு 61 சதவீத வருகை பதிவாகியுள்ளது.

ஊவா மாகாணத்தில் இரு பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் அங்கு 75 சதவீத வருகை பதிவாகியுள்ளது.

மேல் மாகாணத்தை தவிர ஏனைய எட்டு மாகாணங்களிலும் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இரண்டாம் வாரத்தின் முதலாம் நேற்றுமுன்தினம் சராசரியாக 65 சதவீத மாணவர்களின் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது.

முதல் வாரத்தில் இது 54 சதவீதமாக ஆக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார். (எ)

# இலங்கை விமானப் படைக்கு இந்திய பாதுகாப்பு உபகரணம்



கொழும்பு,ஜன.20

வான் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் இந்திரா எம்.கே. ரேடார் உதிரிப்பாகங்களை இலங்கை விமானப் படைக்கு இந்தியா வழங்கியுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லேவின் ஒத்துழைப்பின் கீழ் வழங்கப்பட்ட உபகரணங்களை கடந்த 16 ஆம் திகதி இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் சுதர்ஷனா பதிரானா உத்தியோகபூர்வமாகப் பெற்றுக் கொண்டார்.

இலங்கையின் நன்றி வெளிப்படுத்தும் வகையில் நினைவுச்சின்னம் விமானப் படைத் தளபதியால் இந்திய உயர்ஸ்தானிகர் பாக்லேவுக்கு வழங்கப்பட்டது. (எ)

# 29 ஆயிரம் கிலோ கிராம் தேயிலையுடன் 7 பேர் கைது

கொழும்பு,ஜன.20

சீதுவ, கொடுகொடை பகுதியில் 29 ஆயிரம் கிலோ கிராம் கழிவுத்தேயிலையுடன் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தேயிலை என்று பெயர் பொறிக்கப்பட்ட இந்த கழிவுத் தேயிலை தொகை மத்திய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கழிவுத் தேயிலையை எடுத்துச் செல்வதற்குத் தயார் படுத்தப்பட்டிருந்த கொள்கலன் மற்றும் ட்ரக் ரக வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (எ)

# குறைந்தபட்ச சம்பள கொடுப்பனவை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி

## அமைச்சர் கெஹலிய தகவல்



கொழும்பு,ஜன.20

ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளக் கொடுப்பனவு சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் குறைந்தபட்ச சம்பளத்தை 25 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)

# அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்த அனுமதி

கொழும்பு,ஜன.20

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார். (எ)



# உதவி பிரதேச செயலாளர்களாக படையினரை நியமிக்க திட்டம்!

## எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜன. 20**

**பிரதேச செயலர்களின் அதிகாரத்துக்கும் மேலாக, ஓர் இராணுவ அதிகாரியை நியமிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.**

நேற்று எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வியத் மக அமைப்புகளில் நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு தொடர்ச்சியாக தோல்விகளே ஏற்பட்டவண்ணமுள்ளன. கொரோனா பரவலைக்கூட கட்டுப்படுத்த இவர்களால் முடியாதவர்களாக இருக்கின்றனர். நல்லாட்சி அரசாங்கம் செய்த நல்ல திட்டங்களை தற்போதைய அரசாங்கம் தனக்கு சாதமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

பேலியகொடை, மெனிங் சந்தை, காற்றலை மின் உற்பத்தி நிலையம், ரயர் உற்பத்திச்சாலை சகலதும் நல்லாட்சி அரசாங்கத்தினுடையது. “எலிய” ”சிங்களே” மற்றும் “வியத் மக” என்று பல பெயர்களைக கூறி மக்களிடம் வந்து மக்களை இன்று ஏமாற்றியுள்ளனர். சகலரினதும் செயல்பாடுகள் தோற்று விட்டது.

சர்வாதிகார முறைமைக்கு நாட்டின் ஒழுங்கைக் கொண்டு செல்கிறார் ஜனாதிபதி. பொது நிர்வாக அமைச்சை இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. மாவட்ட அரசாங்க அதிபர்களை இராணுவ அதிகாரிகளின் கீழ் கொண்டு வந்துள்ளார். கிராம உத்தியோகத்தருக்கு மேலான ஓர் இராணுவ அதிகாரியை சகல கிராம சேவகர் பிரிவிலும், உதவி பிரதேச செயலாளர்களுக்கு மேலான ஓர் இராணுவ அதிகாரியை உதவி பிரதேச செயலாளராக கிட்டிய நாட்களில் நியமிக்கவுள்ளனர்.

இலங்கை வங்கிக்கு ஓர் இராணுவ அதிகாரியை நியமித்துள்ளனர். பொலிஸ் சேவைக்கு சட்டத்தரணிகள் இணைக்கப்படவுள்ளனர். ஏன் பொலிஸ் அதிகாரிகளால் அந்த வேலையை செய்ய முடியாதா? இவர்கள் கூறிய கட்டமைப்பு மாற்றம் இதுவா? சிறைச்சாலை புலனாய்வு பிரிவிடம். ஏன் இருக்கும் சட்ட ஏற்பாடுகளில் தீர்வு காண முடியாது. இதற்கும் இராணுவத்தினரை ஆட்சேர்க்கவுள்ளனர் - என்றும் அவர் கூறினார்.

# அரசாங்கத்தின் வீழ்ச்சி அதிகரித்து வருகின்றது

## கபீர் ஹாசிம் எம்.பி.

கொழும்பு, ஜன. 20

கொரோனாவை கட்டுப்படுத்துதல், பொருளாதாரத்தை உயர்த்துதல், வெளிவிவகாரக் கொள்கை என்பவற்றில் தொடர்ச்சியாக அரசாங்கம் வீழ்ச்சியை சந்தித்து வருகின்றது என்று கபீர் ஹாசிம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பில், மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டின் கடன் சுமை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. வருமானம் குறைவு, மூலதன பயன்பாடுகள் வீழ்ச்சி, வெளிவிவகாரக் கொள்கையில் பல வீனம் என்று அரசாங்கத்தின் வீழ்ச்சி தொடர்ந்து வருகின்றது.

கொரோனாவை கையாளும் விடயத்தில் போலியான வியத் மக பன்டிதர்களைக் கன்டோம். நாளுக்கு நாள் நாட்டில் இன மற்றும் மத வாதங்களை பரப்பி ஆட்சிக்கு வந்தனர். வியதகம அறிவளிகள். பலர் பல தேர்தல் பிரசார மேடைகளில் இவற்றை முழங்கினர். இன்று அவர்கள் கூறியவைகள் நிறைவேறியுள்ளனவா?

கிழக்கு முனையம் விடயத்தில் அரசாங்கம் வெளிப்படையாக இருக்க வேண்டும். நல்லாட்சி அரசாங்கம் தமது திட்டங்களை மக்களுக்கு தெளிவாக செல்லும். வெட்கம் இல்லாமல் எங்களுக்கு கூறுகிறார்கள் “நாங்கள் அரச வளங்களை விற்றதாக”, முடியுமானால் கூறுங்கள். கடந்த நான்கு ஆண்டு காலத்திற்குள் நாங்கள் விற்ற வளங்களைக் கூறுமாறு சவால் விடுக்கிறேன் - என்றார்.

# மேலும் தேய்கிறது ஐ.தே.க.! மூவர் அணி வெளியேறுகிறது

கொழும்பு, ஜன. 20

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உப தலைவர் ரவி கருணாநாயக்க, தேசிய அமைப்பாளர் நவீன் திஸநாயக்க, முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர், கட்சியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2021ஆம் ஆண்டு ஆரம்பத்தில், கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்த போதும் அவர் அந்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கவில்லை.

அண்மையில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் மீண்டும் கட்சியின் தலைவராக, ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும், கட்சியில் புதிய பதவிகள் வழங்கும் விடயத்தில் தான்தோன்றித்தனமாக முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியிலுள்ள சிலர் அதிருப்தி அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் ரவி கருணாநாயக்க, நவீன் திஸநாயக்க, அர்ஜுன ரணதுங்க ஆகியோர், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலக முடிவு செய்துள்ளனர் என்று தெரியவருகிறது.

விரைவில் இவர்கள் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்து கொள்வர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# பேரினவாதத்தை எதிர்த்தே தீருவோம்

## சட்டத்தரணி சிறீகாந்தா அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

பேரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிராக, தமிழ் இனத்தின் மத்தியில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் சமூக நடவடிக்கையாளர்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டிய கூட்டுப் பொறுப்பை கொண்டிருக்கின்றார்கள் என தமிழ்த் தேசியக் கட்சி தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலை ஆக்கிரமிப்பு தொடர்பில் கருத்து வெளயிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழர்களின் மரபு வழி மண்ணில், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வரும் பேரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிராக, தமிழ் இனத்தின் மத்தியில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் சமூக நடவடிக்கையாளர்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டிய கூட்டுப்பொறுப்பை கொண்டிருக்கின்றார்கள். (எ)

# தமிழர்களின் மரபுரிமைகளை அரசு திட்டமிட்டு அழிக்கிறது

## செல்வம் எம்.பி. குற்றச்சாட்டு

தமிழ் மக்களின் மரபுரிமைகளையும் அடையாளங்களையும் திட்டமிட்டு அழிக்கும் வகையில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயல்பாடுகளின் ஓர் அங்கமாகவே குருந்தூர் மலைப்பகுதியில் பௌத்த விகாரைகள் காணப்பட்டன எனக் குறிப்பிட்டு அகழ்வாராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்மையை கருதவேண்டியுள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அத்தோடு இந்த அகழ்வாராய்வுப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாயின், அதில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்களும் மாணவர்களும் கட்டாயமாக உள்வாங்கப்பட வேண்டும் என பாராளுமன்றத்தில் வலியுறுத்தவிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது, நாங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை குருந்தூர் மலை அடிவாரத்திற்குச் சென்றிருந்தோம். அங்கு எம்மை பொலிஸார் அனுமதிக்கவில்லை. அமைச்சர் ஒருவரின் வருகைக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இராணுவத்தினரும் பொலிஸாரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

அங்கு தைப்பொங்கல் தினத்தன்று மக்கள் தமிழர் முறைப்படி பண்டிகையைக் கொண்டாடியிருந்த நிலையில், அப்பகுதிகளை தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகள் அடையாளப்படுத்திக் கொண்டிருந்தனர். அமைச்சர் வருகை தந்து அதனைப் பார்வையிட இருப்பதாகக் கூறினார்கள்.

அதுமாத்திரமன்றி கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் அங்குவந்து தங்கியிருந்து ஆராய்வுகளை முன்னெடுக்க விருப்பதாகவும் எமக்குத் தகவல்கள் கிடைத்தன.

எனினும், இந்தப் பணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மாணவர்களும் இணைந்து செயல்படுகின்றபோது, அதில் வெளிப்படைத்தன்மை பேணப்படும் என்பதே எமது அபிப்பிராயம் - என்றார். (ஐ)

# தேசிய உற்பத்தியாளர்களைப் பாதிக்கும் எதையும் இறக்குமதி செய்யமாட்டோம்

## அமைச்சர் பந்துல திட்டவட்டம்

கொழும்பு, ஜன.20

நல்லாட்சி அரசாங்க காலத்தில் நாட்டின் தேசிய உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்படவில்லை. ஆனால் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கும் தேசிய பொருளாதாரத்துக்குமே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் முன்னுரிமையளித்து செயற்படுகின்றது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நிதி அமைச்சின் கீழ் இருக்கும் விசேட வியாபார பண்ட அறவீட்டு சட்டத்தின் கீழ் கட்டளை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் உற்பத்தியாளர்கள் பற்றி மாத்திரமே கதைக்கின்றோம்.

அதேபோன்று சில சந்தர்ப்பங்களில் நுகர்வோர் பற்றி மாத்திரமே கதைக்கின்றோம். உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திக்கு அதிக விலை கிடைப்பதையே எப்போதும் எதிர்பார்ப்பார்கள். உற்பத்தியாளர்களைவிட எமக்கு வாக்களிக்கும் நுகர்வோர் தான் அதிகமாகும்.

நுகர்வோர் எப்போதும் குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக்கொள்ளவே எதிர்பார்க்கின்றனர். இரண்டு தரப்பினருக்கும் இடையில் ஒரு பிரச்னையுள்ளது.

இரு தரப்பினரையும் பாதுகாக்கும் வகையில் தான் அரசாங்கம் வரிக்கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் பிரகாரம்தான் விசேட வியாபாரப் பண்டங்களுக்கான வரிமுறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேவையான நேரத்தில் குறித்த சட்டத்தை மறுசீரமைக்க முடியும் என்பதுடன், சட்டம் திருத்தப்பட்டு ஆறுமாதகாலத்திற்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

மேலும் சுதேச உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே விசேட வியாபாரப் பண்டங்களுக்கான வரிமுறைமை 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் இந்த நாட்டின் இலட்சக்கணக்கான விவசாயிகளை பாதுகாக்க வேண்டியது கடமையும் பொறுப்புமாகும்.

ஆனால், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நாட்டின் தேசிய உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்படவில்லை. ரிஷாத் பதியுதீன்தான் வர்த்தக அமைச்சராக இருந்தார்.

தேசிய உற்பத்தியாளர்களை கவனத்தில் கொள்ளாவது வெளிநாடுகளில் இருந்து பொருட்களை கொண்டுவந்து குறைந்த விலையில் கொடுத்தார்.


75, 80 ரூபாவுக்கு இடையில் பொன்னி சம்பா அரிசி இறக்குமதி செய்து முழு சந்தையையும் நிறைக்க முடியும். இந்தியாவிலிருந்து இறகுமதி செய்ய முடியும். வரி இல்லாது அரிசி விலையை குறைக்க முடியும். ஆனால், எமது நாட்டில் தற்போது அருவடை காலமாகும்.

மண்ணுடன் முட்டி மோதும் அவர்களுக்கு கடனைக்கூட செலுத்திக்கொள்ள முடியாத சூழல் ஏற்படும். - என்றார். (எ)


ஈழநாடு
Eelanadu


# அரசியல் கைதிகளை விடுவியுங்கள்:
# சர்வமதத் தலைவர்கள் கூட்டாக ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு மகஜர்











**யாழ்ப்பாணம், ஜன. 20**

**சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு வடக்கு மாகாணத்தில் உள்ள சர்வ மத தலைவர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.**

**மேற்குறித்த விடயம் தொடர்பாக மதத் தலைவர்களின் கையெழுத்து அடங்கிய மகஜர் நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி “குரல் அற்றவர்களின் குரல்” அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த மாதம் யாழ். மாவட்டத்தின் சர்வ மத தலைவர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதில், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக வடக்கில் உள்ள சர்வ மதத்தலைவர்களின் கோரிக்கை அடங்கிய மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் மத தலைவர்களிடம் கையெழுத்து பெறப்பட்டு, நேற்றைய தினம் யாழ். ஸ்ரீ நாக விகாரை விகாராதிபதி மீஹாகஜதுரே ஸ்ரீ விமலதேரர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப் பட்டது.

மதத்தலைவர்களின் கையெழுத்து அடங்கிய மகஜரை குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் மு.கோமகன் தேரரிடம் வழங்கி வைத்தார்.

அந்த மகஜரில், “மதத் தலைவர்களாகிய நாங்கள், சிறைகளில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு அளிக்கும்படி தங்களை மனப்பூர்வமாக வேண்டிக் கொள்கிறோம். இவர்களின் விடுதலையால் சமூகத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று நாம் மனப்பூர்வமாக நம்புகிறோம். பிரதான சமூக நீரோட்டத்துக்குள் தாங்கள் வருவது குறித்து அவர்களும் அவர்களின் குடும்பத்தாரும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவது எமது நாட்டின் சமாதானம் மற்றும் நல்லிணக்க செயல்பாடுகளுக்கு உதவும் என்று உணர்கிறோம். ஜனாதிபதியிடமிருந்து இதற்கு அனுகூலமான பதில் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-3)

# இலவச தடுப்பூசி முதலில் முப்படைகளுக்குத்தானாம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, ஜன. 20

கொவிட் -19 வைரஸ் தடுப்பூசிகள் கிடைத்தவுடன் முதலில் முப்படைகளுக்கும், பொலிஸாருக்கும், சுகா தார தரப்பினருக்கும் இலவசமாக வழங்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கொண்டுவரப்பட்ட நிதி அமைச்சின் கீழான விசேட வியாபார பண்ட அறவீட்டு சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் இருக்கின்ற நிலையில் கொரோனா தடுப்பூசி குறித்து எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்புகின்றனர், ஆனால், உலக சுகாதார ஸ்தாபனம் கூட இன்னமும் கொரோனா தடுப்பூசி குறித்து தெளிவான உறுதிப்படுத்தல் எதனையும் முன்வைக்கவில்லை. தடுப்பூசி குறித்து இன்னமும் பேச்சு மட்டத்திலேயே சென்றுகொண்டுள்ளது.

எனினும், அரசாங்கம் குழு ஒன்றை நியமித்து அந்த குழு இப்போது சகல நாடுகளுடனும் பேச்சு நடத்தி வருகின்றது. இலங்கையில் 20 வீதமானவர்களுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தடுப்பூசிகளை வழங்க தீர்மானித்துள்ளது. இதில் கொவிட் -19 வைரஸ் தடுப்பூசிகளை சுகாதார தரப்பினருக்கும், முப்படைகளுக்கும், பொலிஸாருக்கும், சுற்றுலாத்துறையில் உள்ளவர்களுக்கும் வழங்க கோரிக்கை விடுத்துள்ளோம்.

அதேபோல் மக்கள் தொகையில் 52 வீதமானவர்களுக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் 18 வயதிற்கு குறைந்த எவருக்கும் வழங்க முடியாது. எனவே, இந்த தடுப்பூசிகளில் 20 வீதம் இலவசமாக கிடைக்கின்றது, ஏனைய தொகையை விலைகொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது - என்றார். (ஐ)

# “சட்டத்தரணிகளை பொலிஸ”க்கு இணைக்க எனக்கு அதிகாரமில்லை”

கொழும்பு, ஜன. 20

“சட்டத்தரணிகள் 150 பேரை பொலிஸ் பரிசோதகர்களாக நான் இணைத்துக்கொள்ளப் போகிறேன் என்று தெரிவிக்கப்படும் செய்திக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சட்டத்தரணிகளை பொலிஸில் இணைத்துக்கொள்ளும் அதிகாரமும் எனக்கு இல்லை”, என்று தெரிவித்துள்ளார் நீதி அமைச்சர் அலிசப்ரி.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர் புத்திக்க பத்திரண, சட்டத்தரணிகள் 150 பேர் காவற்துறை பரிசோதகர்களாக இணைத்துக் கொள்ளப் போவதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

மொழி அடிப்படையில் இணைத்துக்கொள்ளும் போது சிங்கள பிரதேசங்களுக்கு சிங்கள மொழி தெரிந்தவர்களும் சிறுபான்மை மக்கள் இருக்கும் பிரதேசங்களுக்கு தமிழ் மொழி தெரிந்தவர்களும் இணைத்துக் கொள்ளும் நிலைமை ஏற்படும் என்றே நினைக்கின்றேன். ஆனால், அனைத்து பிரதேசங்களுக்கும் தமிழ், சிங்கள மொழியில் திறமையானவர்களை நியமிப்பதே நல்லது.

அத்துடன் பொலிஸ் திணைக்களத்துக்கு சட்டத்தரணிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையில் நீதித்துறைக்கு எவ்வாறான அதிகாரம் இருக்கின்றது என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# போர் பாதித்த மக்கள் நலன் தொடர்பில் அரசிடம் தனிக் கொள்கை கிடையாது

## வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் விசனம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள், காணியின்றி உள்ள நிலையில், தனியாருக்குச் சொந்தமான காணிகளை, இராணுவம் சுவீகரிக்க முயல்கின்றமை, போரில் பாதிக்கப்பட்ட மக்களின் நலனில், அரசாங்கத்துக்கு என தனிக் கொள்கை இல்லை என்பதை, தெளிவாகக் காட்டுவதாக உள்ளது என்று ரெலோவின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

தீவகத்தில், நில அபகரிப்புக்கு எதிராக, நேற்று வேலணையில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தீவகத்திலுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை, இராணுவத்துக்கு சுவீகரிக்க முயற்சிகள் நடக்கின்றன. அமைச்சின் அறிவுறுத்தல் பெறும் வரையில், காணிகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்படாது என அறிவிக்கப்பட்டமையால், போராட்டம் முடிவுக்கு வந்ததாகவும் - கூறினார்.

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 15413 \| கு \|1986<br>கொக்குவில் \| இந்து \|<br>Chef \| Germany \|<br>கார்த்திகை (ரிஷபம்) \| 182செ.மீ | 15425 \| ப \|1992<br>கோண்டாவில் \| இந்து<br>ICT Assistant \| Sri lanka \|<br>மூலம் (தனுசு) \| 159செ.மீ |
| 15419 \| வே \|1986<br>அச்சுவேலி \| இந்து \|<br>Own Super Market \| UK \|<br>சதயம்(கும்பம்) \| 175செ.மீ | 15353 \| வே \|1992<br>யாழ்நகரம் \| இந்து \| USA \|<br>Medical Assistant \| செவ் : 07<br>பரணி(மேடம்) \| 162செ.மீ |
| 15628 \| வே \|1986<br>காரைநகர் \| இந்து \| லக்.செவ்<br>Sales Rep \| Sri Lanka \|<br>அனுஷம்(விருச்சிகம்) \| 165செ.மீ | 15140 \| வி \|1992<br>பெரியவிளான் \| இந்து \| செவ் : 07<br>System Engineer \| Sri lanka \|<br>மூலம்(தனசு) \| 163செ.மீ |
| 15287 \| வே \|1986<br>யாழ்நகரம் \| இந்து \|<br>Medical Rep \| Sri Lanka \|<br>மூலம்(தனுசு) \| 168செ.மீ | 15179 வே \|1992<br>காரைநகர் \| இந்து \| செவ் : 12<br>Sri Lanka \| Tax Associate<br>திருவாதிரை(மிதுனம்) \| 160செ.மீ |
| 15314 \| வே \|1986<br>நுணாவில் \| இந்து \|<br>Admin Manager \| UK \|<br>பூராடம்(தனுசு) \| 188செ.மீ | 15416 \| வே \|1993<br>அளவெட்டி \| இந்து \|<br>Management Service Officer<br>Sri lanka \| புனர்பூசம்(கடகம்) \|<br>150செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. யோன்சன் ராஜ்குமார்
ஆசிரிய ஆலோசகர், யாழ் கல்வி வலயம்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - பெண்கள் மருத்துவம்
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை




**பகல்**

1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-நேரலை
5.30 மணி : குறுந்திரை நேரம்




6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**

7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



9.30 மணி : அந்த நாலு பேர்
10.00 மணி : யாவரும் கேளீர்

DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் விவேக் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி

**இரவு**

6.00 மணி : கொமடி கலாட்டா
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி TV CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - வரலாறு
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - வரலாறு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) அரசியல் விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : தரம் 10 - கணிதம்
1.00 மணி : தரம் 09 - வரலாறு
2.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சுகாதாரம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு

**இரவு**

7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள் விஞ்ஞானம்

ஐ ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் ஏழாலை வசந்தபுரம் வசந்தநாக பூஷனி அம்மன் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் கைதடி வாலாம்பிகை அம்மன் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு இறுபிட்டி அரியநாயகன்புலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில் திருவிழா

CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடலகள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

Pirai Television

**காலை**

காலை
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.